விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-7258)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 27 திங்கட்கிழமை (12.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 236

## கோத்தாவே வேட்பாளர்
### அறிவித்தார் மகிந்த



(கொழும்பு)
2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிறுத்தப்படுவார் என்று எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக அறிவித்தார். 23

## வேட்பாளராக கோத்தாவை தெரிவு செய்தமை மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது
### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)
கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு தெரிவு செய்தமையானது நாட்டு மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நபர் ஒருவரின் தனிப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



பண்டாரநாயக்க குமார 23

நான் தமிழ்த் தலைவர்களைப் போன்றவன் அல்ல

## சொல்வதைச் செய்பவன் செய்வதைச் சொல்பவன்
### தமிழில் பேசினார் மகிந்த

(கொழும்பு)
தமிழர்கள் இந்த நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெற்று சம உரிமைகளோடு வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ 23

பொதுஜன பெரமுனவின்

## தலைவரானார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க் கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றார். 23

## சிங்களவராக இருந்தால் ஜனாதிபதி ஆகியிருப்பேன்
### அமைச்சர் மனோ

(கொழும்பு)
நான் ஒரு சிங்கள இலங்கையராக இருந்திருந்தால் இந்நேரம் நாட்டின் ஜனாதிபதி ஆகியிருப்பேன் என அமைச்சர் மனோ கணேசன் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில் "நான் 23

## கோத்தாவுக்கு ஆதரவளிக்க மைத்திரி தீர்மானம்?

(கொழும்பு)
பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என எதிர்பாக்கப்படுகின்ற கோத்தபாய ராஜபக்சவிற்கு ஆதரவளிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் என கொழும்பின் அரசியல் வட்டாரங்கள் தெரி 23

கோத்தாவும் நானும் ஆட்சி செய்தால்

## மக்களின் பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கலாம்
### இந்திய ஊடகத்துக்கு மகிந்த பேட்டி

(கொழும்பு)
கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்தால் - பிரதமராக அதிக அனுபவமுள்ள நான் பிரதமராக பதவி வகித்தால் நாங்கள் அனைவரும்இணைந்து மக்களிற்கு என்ன 23

# தமிழர்களின் பிரச்சினையை எனது ஆட்சியில் தீர்ப்பேன்
## கொள்கை விளக்கவுரையில் கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)
**வடக்கு மக்களுக்குத் தேவையான, சிறப்பான எதிர்பார்ப்புகள் பற்றி எமக்கு நல்ல புரிந்துணர்வு உள்ளது. அவர்களின் இந்தப் பிரச்சினைகளை எமது அரசால் உறுதியாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.**



எனது நாட்டை எதிர்ப்பவர்களுக்கு நான் ஒருபோதும் தலைவணங்கியதில்லை. எதிர்காலத்திலும் எனது தாய் நாட்டின் இறையாண்மைக்கு பாதகம் ஏற்படுவதற்கு இடமளிக்க மாட்டேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது தேசிய மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் அந்தக் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவால், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் வேட்பாளராக சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவை அறிவித்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட கோத்தபாய ராஜபக்ஷ தனது கொள்கை விளக்க உரையை மாநாட்டில் முன்வைத்தார். அதன்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை அரசியலில் மிகவும் உறுதியான திருப்புமுனையை குறித்து நிற்கும், இந்த வரலாற்று மாநாட்டில், சிறிலங்கா பொதுஜன பெரமுன முதன்மையான பல அரசியல் கட்சிகளினதும், சுயாதீன அமைப்புகளினதும் பல குழுக்களினதும், பொது நோக்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும், ஜனாதிபதி வேட்பாளராக கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவால், இன்றைய தினம் (நேற்று) என்னை பெயரிடுதல் 23

## உடை மற்றும் முகத்தை மாற்றுவதால் மாற்றம் ஏதும் ஏற்பட்டு விடாது
### கோத்தா வேட்பாளரானமை குறித்து ரணில் பேச்சு

(குருநாகல்)
உடை மற்றும் முகத்தை மாற்றுவதால் மாற்றம் ஏதும் ஏற்பட்டுவிடாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், 10 வருடங்களாக மாற்றத்தை ஏற்படுத்த முடியாதவர்கள் ஐந்து வருடங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவார்களா என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

குருநாகலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளி 23

கோத்தபாய ராஜபக்ஷவின்

## வெள்ளை வான்களுக்கெதிராக மக்களை அணி திரட்டுவோம்
### மங்கள சமரவீர ஆவேசம்

(கொழும்பு)
கோத்தபாய ராஜபக்ஷவின் வெள்ளை வான் கொடுங்கோன்மை மற்றும் ஒடுக்குமுறைக்கு எதிராக மக்களை அணிதிரட்டப்போவதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தனது பொறுப்புகளை கைவிட்டுவிட்டு நாட்டைவிட்டு ஒருபோதும் தப்பியோடாத் 23

பெரமுன கூட்டத்துக்குச் சென்ற


## சுதந்திரக் கட்சியினருக்கு எதிராக நடவடிக்கை - தயாசிறி

(கொழும்பு)
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பொதுஜன பெரமுனவுக்குச் சென்றுள்ள அத்தனை பேருடைய பாராளுமன்ற உறுப்புரிமையை எடுத்து ஸ்ரீ ல.சு.கட்சியிலுள்ள ஏனையவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப் போவதாக ஸ்ரீ 23

# மரண அறிவித்தல்

## நித்தியானந்தராசா சிறீகாந்தன்

தோற்றம்
17 • 07 • 1954



மறைவு
10 • 08 • 2019

யாழ் அராலி வீதி, சங்கானையை பிறப்பிடமாகவும் கதிரமலை சிவன் கோவிலடி சுன்னாகத்தை நிரந்தர வதிவிடமாகவும் கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நித்தியானந்தராசா சிறீகாந்தன் 10.08.2019 அன்று சுன்னாகத்தில் தனது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நித்தியானந்தராசா - நாகரத்தினம் தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும் சாரதாதேவியின் பாசமிகு கணவரும், அனுசியா (கனடா), சசி (இலங்கை), சறூன் (பிரான்ஸ்), லோறன்ஸ் (கனடா), தர்சன் (கனடா), பிரசாத் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தரஞ்சிதமலர் (இலங்கை), ஆனந்தஜோதி (கனடா), சிறீபவன் (கனடா), ஆனந்தசொரூபினி (லண்டன்), சிறீமோகன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிர்மலாதேவி (இலங்கை), லலிதாதேவி (பிரான்ஸ்), சிறீபாஸ்கரன் (இலங்கை), ஜெயபாஸ்கரன் (லண்டன்), தவபாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றொபின் (கனடா), சிவா (இலங்கை) ஆகியோரின் மாமனாரும், அட்சயா (கனடா), பிருந்தாவன் (இலங்கை), தரண்யா (இலங்கை) ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2019) செவ்வாய்க்கிழமை அன்று முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மதியம் 12.00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(9869)

சிவன்கோவிலடி, சுன்னாகம். 077 047 2996 தகவல் : குடும்பத்தினர்

# தேர்தலை காலந்தாழ்த்தும் நடவடிக்கை ஏகாதிபத்திய ஆட்சியின் வெளிப்பாடே!



## மகிந்த அணி குற்றச்சாட்டு

(கேகாலை)

**தேர்தல்களைக் காலந்தாழ்த்துவதன் ஊடாக அரசாங்கம் ஏகாதிபத்திய நிர்வாகத்தின் வெளிப்பாடுகளை நிருபணம் செய்வதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க குற்றம் சுமத்தினார்.**

கேகாலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டில் ஜனநாயகத்தை உறுதிசெய்துவிட்டதாகக் கூறி வருகிறார்.

இருந்தபோதும் கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நடத்தப்பட வேண்டிய அனைத்து தேர்தல்களையும் நடத்தாமல் இருக்கிறார். இது ஏகாதிபத்திய ஆட்சியின் அடையாளமாக நாங்கள் கருதுகின்றோம்.

இளம் சமுதாயத்திற்காகப் பேசுவதற்கு மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க இந்த அரசாங்கத்திற்கு விருப்பம் இல்லை என்றே தோன்றுகிறது" என செஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## உயர்ஸ்தானிகர்கள் 13 பேர் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பெயர் குறிப்பிடப்பட்ட வெளிநாடுகளுக்கான உயர்ஸ்தானிகர்கள் 13 பேரை நியமிப்பது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி நைஜீரியா, கொரியா, ஜோர்தான், குவைத், வியட்நாம், நேபாளம், கியூபா, எதியோப்பியா, லெபனான் ஆகிய நாடுகளுக்கு உயர்ஸ்தானிகர்கள் நியமிக்கப்பட்டனர். (இ-7)

## மாகாணத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்ற வியாக்கியானத்தை கோரினார் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை கோரியுள்ளதாக தெரிய வருகிறது.

இது தொடர்பில் எதிர்வரும் மாதம் முதல் வாரத்தில் உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் வெளியிடப்படுமென்றும் எதிர்பார்க் கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியுமா? என உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தின் மூலமே இறுதித் தீர்மானம் மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## போதையில் சாரத்தியம் 8 ஆயிரத்து 147 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 24 மணிநேர காலத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 180 சாரதிகள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமானது.

அதன்படி நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரையான கடந்த 24 மணிநேர காலத்தில் 180 சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 5 ஆம் திகதி மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பமான தினத்தில் இருந்து இதுவரை 8ஆயிரத்து 147 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. (இ-7)

## காஷ்மீர் விவகாரம்

# மகிந்தவின் கருத்து குறித்து இந்தியா கடும் அதிருப்தி



(கொழும்பு)

இந்தியாவின் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்த கருத்திற்கு. இந்தியத் தூதரகம் கடுமையான அதிருப்தி வெளியிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கத்திற்கான சாத்தியப்பாடு குறித்து கருத்துத் தெரிவித்த போது. இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் நடந்திருப்பவற்றைக் கவனத்திற்கொண்டே இலங்கையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது எனத் தெரிவித்திருந்தார்.

அதாவது, காஷ்மீர் மக்கள் தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்தமையாலேயே அவர்களின் சிறப்பு அந்தஸ்தை இந்தியா இரத்து செய்திருந்தது என்றும் தமிழ் மக்களும் இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றும் மறைமுகமாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மகிந்த ராஜபக்ஷவின் கருத்து இந்திய அரசை கடுமையான அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளதென்றும் இதன் காரணமாக கொழும்பிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவிடம் தொலைபேசி வழியாக தமது அதிருப்தியை வெளியிட்டதாகவும் தெரிய வருகிறது.

அதற்கமைய காஷ்மீர் தொடர்பான இந்தியாவின் நடவடிக்கை, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறிய அர்த்தத்தில் இந்தியாவால் மேற்கொள்ளப்படவில்லை என இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மகிந்தவின் கருத்து காஷ்மீர் மக்களை இந்தியா அடிமை ப்படுத்தியுள்ளதை போன்ற பொருளை ஏற்படுத்துகிறது. வேறு சில அரசியல் காரணங்களாலேயே இந்தியா அந்த நடவடிக்கையை எடுத்தது என இந்தியா தரப்பு தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (இ-7)

## ராஜபக்ஷவினரை பழிவாங்கவே நல்லாட்சி அரசு பதவிக்கு வந்தது

### நாமல் சுட்டிக்காட்டு



(கேகாலை)

ராஜபக்ஷவினரை பழிவாங்கவே நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொண்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கேகாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் வேகமாக நாட்டின் முதலாவது அரசியல் சக்தியாக குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன உருவெடுத்துள்ளது. நாங்கள் கட்சியை ஆரம்பிக்கும் போது பல சவால்கள் எழுந்தன.

ஒரு புறம் நாங்கள் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்திருந்தோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்து விட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பண்டாரநாயக்க, டி.ஏ.ராஜபக்ஷவின் பஞ்சமா சக்தியை கைவிட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையை ஏற்றுக்கொண்ட பின்னர், மகிந்த ராஜபக்ஷ உட்பட அரசியல் சக்திகள் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்தன. அப்போது தனியான கட்சியை ஆரம்பிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் இருந்தோம்.

புதிய கட்சியை ஆரம்பித்தால், வீதியில் நடக்க வைத்து விடுவேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடகங்களிடம் பகிரங்கமாகக் கூறினார். நாங்கள் நடந்தோம். தேர்தல் ஒன்றைக் கோரி, கண்டியில் இருந்து கொழும்புக்கு நடந்து வந்தோம்.

வீதியில் நடப்பது எமக்குப் பெரிய வேலையல்ல. நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்தில் இருந்தே ராஜபக்ஷவினரை பழிவாங்கும் வேலையையே செய்தது.

இதற்காகவே நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொண்டது எனவும் நாமல் தெரிவித்தார். (இ-7)

# மல்யுத்தத்தில் பஜ்ரங் புனியா தங்கம் வென்றார்



ஜார்ஜியா நாட்டில் நடைபெற்ற மல்யுத்தம் தொடரில் இந்திய வீரர் பஜ்ரங் புனியா தங்கம் வென்றார். இந்த சீசனில் அவரது 4-வது தங்கம் இதுவாகும்.

ஜார்ஜியா தலைநகர் டிபிலிசியில் டிபிலிசிஸ் கிராண்ட் பிரிக்ஸ் மல்யுத்தம் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்களுக்கான 65 கிலோ எடைப்பிரிவு ப்ரீ ஸ்டைல் போட்டியில் இந்திய வீரரான பஜ்ரங் புனியா இறுதிப் போட்டியில் ஈரானைச் சேர்ந்த பெய்மேன் பிபியானியை எதிர்கொண்டார். இதில் பஜ்ராங் புனியா 2-0 என வெற்றி பெற்று தங்கம் வென்றார்.

இந்த சீசனில் பஜ்ராங் வெல்லும் 4-வது தங்கம் இதுவாகும். இதற்கு முன்டான் கொலோவ், ஆசிய சம்பியன்ஷிப், அலி அலிவ் தொடர் ஆகியவற்றில் தங்கம் வென்றிருந்தார்.


## வேலையாட்கள் தேவை


யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுநர் ஆண், பெண் உடன்தேவை. (C-7263)

தொடர்புக்கு:
077 748 8093


# கண்ணீர் அஞ்சலி

## சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் மகேஸ்வரக்குருக்கள்

(கண்ணன் ஐயா)



கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயிலில் 1995ஆம் ஆண்டு வைகாசி மகோற்சவ பெருவிழாவின் பிரதம குருவாகவும் 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பங்குனி உத்தர மகாகும்பாபிஷேகக் கிரியைகளை முன்னின்று நடாத்தியவருமான சிவஸ்ரீ சதா.மகேஸ்வரக் குருக்களின் மறைவால் நாம் மிகுந்த துயர் அடைவதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தில்லையம்பதியாளை பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபையினர்
ஈழத்து தில்லையம்பதி

(C-7265)

# மரண அறிவித்தல்

பிறப்பு 1932 – 09 – 18



இறப்பு 2019 – 07 – 26

## திருமதி ஞானம்மா அந்தோனிப்பிள்ளை

[அந்தோனிப்பிள்ளை ரீச்சர்]

(ஓய்வு பெற்ற ஆசிரியை- யாழ். றோ.க. கன்னியர்மடம்,மயிலிட்டி,
யாழ்.யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை,
யாழ். தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி, தெல்லிப்பழை)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது லண்டனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் ஞானம்மா அந்தோனிப்பிள்ளை அவர்கள் கடந்த 26.07.2019 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இன்னாசிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் ரஜிதா (ஜேர்மனி), காலஞ்சென்ற ரஜீஸ் (அண்ணா), ரணிற்றா (U.K), ரஞ்சித் (U.K), றெஜினோல்ட்ராஜ் (நன்னடத்தை அலுவலர், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். ஹரி (ஜேர்மனி), முரளிதரன் (U.K), பிறின்சி (U.K) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். ஒலிவியா, மோசஸ், ருத், யோஸ்வா, சலோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.08.2019) திங்கட்கிழமை நடைபெற்று Wallington Surrey(U.K) எனும் இடத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி,
தெல்லிப்பழை.

தகவல்:
றெஜினோல்ட்ராஜ் - மகன் 0776220158
ரணிற்றா - மகள் 00442086478469
ரஞ்சித் - மகன் 00440793075031

(9873)

# மரண அறிவித்தல்



## சித்திவினாயக ஐயா கிருஷ்ணகாந்தன் ஐயா

கெருடாவில் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சித்திவினாயக ஐயா கிருஷ்ணகாந்தன் ஐயா நேற்று (11.08.2019) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சித்திவினாயக ஐயா-அரியலட்சுமி அம்மா தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற இராசையா - அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ராஜினி அவர்களின் அன்புக் கணவரும் தர்சிகா, தாரகா, குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆனந்தராஜ் அவர்களின் அன்பு மாமனாரும் கிருதிக்ஷாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2019) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தொண்டைமானாறு காட்டுபுலம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெருடாவில் வடக்கு

தகவல்:-
குடும்பத்தினர்.

(C-7266)

# வடக்கின் மருத்துவ சேவைக்கு 12 ஆயிரம் மில்லியன் நிதி

## வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பம் -முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம்



(முல்லைத்தீவு)

வடமாகாணத்தின் மருத்துவ சேவைக்கென, நெதர்லாந்து நாட்டிலிருந்து 60மில்லியன் யூரோக்கள், அதாவது இலங்கை ரூபாயில் 12ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி பெறப்பட்டுள்ளதாக தெரிவித்த முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், அதற்குரிய வேலைத்திட்டங்கள்விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஒரேஒரு நீண்டகாலத் திட்டத்தைக் கொண்ட மாகாண சுகாதார அமைச்சாக எமது அமைச்சு இருந்தது.

அந்த நீண்டகாலத் திட்டத்தை அடிப்படையாக வைத்து நெதர்லாந்து நாட்டிலிருந்து, எமது வடமாகாணத்திற்கு 12ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதியை நாங்கள் இங்கு கொண்டுவருவதற்கான முயற்சி எடுத்து அதிலே வெற்றியடைந்துள்ளோம்.

குறித்த நிதியில் ஆரம்பிக்கின்ற வேலைத்திட்டத்தில் முதற்கட்டமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அமைக்கப்படவிருக்கின்ற இருதய சத்திரசிகிச்சை உட்பட இருதய நோய்ப் பிரிவு, சிறுநீரக நோய்ப் பிரிவு ஆரம்பிப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில்நாட்டின் பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பருத்தித்துறை மாவட்ட வைத்தியசாலையில் முழுமையான சத்திர சிகிச்சைக் கூடம், அவசர சிகிச்சைப் பிரிவு, நோயாளர் பிரிவு எல்லாவற்றையும் கொண்ட முழுமையான சத்திரசிகிச்சைப் பிரிவு ஆரம்பிப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் எதிர்வரும் 16ஆம் திகதி காலையில் நடைபெறவுள்ளது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் வடமாகாணத்திற்கான விசேட தாய்சேய் மருத்துவ சேவைப் பிரிவு மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில், வடமாகாணத்திற்கான புனர்வாழ்வு வைத்தியசாலை ஆகியவற்றுக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் எதிர்வரும் 16ஆம் திகதி மதியம் மாங்குளத்தில் இடம்பெறவுள்ளது என மேலும் தெரிவித்தார். (9)


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பத்மநாதன் பெனடிற் பத்மகுமாரன்

( உரிமையாளர் யோகாஸ் ஆடையகம்,
– பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்)



ஆறாத் துயர் சுமந்து ஆண்டொன்று ஆனதுவோ...
உழைப்பையே உரமாக்கி உதிரத்தை வியர்வையாக்கி
பழியின்றி பல பணிகள் பற்றுடனே தானாற்றி
நலிவின்றி நாம் வாழ வலிகள் பல நிதம் சுமந்து
அழியாப் புகழுடன் அரனடி சேர்ந்தீரே அப்பா

ஆண்டொன்று கடந்தாலும் ஆறவில்லை நம் துயரம்
மாண்டவர் வருவதில்லை எனும் உண்மை முழுதறிந்து
வேண்டி நாம் நிற்கின்றோம் வேதனையால் துடிதுடித்து
மீண்டும் பிறப்பெடுத்து வீடு வந்து சேரும் அப்பா

கடந்த வருடம் 25.07.2018 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் **பத்மநாதன் பெனடிற் பத்மகுமாரன்** அவர்களின் ஓராண்டு ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று 12.08.2019 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(9848)

அராலி மேற்கு, வட்டுக்கோட்டை, கோட்டைக்காடு. 077 899 9420 குடும்பத்தினர்


## இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மேடம்:** தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகரங்களில் தலையிடுவதைத் விர்ப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள், பெரியோரின் உதவியுண்டு.

**மிதுனம்:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**கும்பம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், உன்னதமான வாழ்வுக்கு வழிவகை செய்வீர்கள், மனங்குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

ராகு
சூரி, சுக், புத
சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்
செவ்
சனி, சந், கேது
குரு

**12.08.2019**
ஆடி 27 , திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
துவாதசி பிற்பகல் 2.22 மணிவரை
பூராடம் பின்னிரவு 5.17 மணிவரை
சுபநேரம் 12.04 - 1.34 மணிவரை
இராகுகாலம் 7.34 - 9.04 மணிவரை
ஹஜ்ஜுப் பெருநாள்
பிரதோச விரதம்
வளவன்

**கடகம்:** வழிபாடு சிறப்பினைக் கூட்டும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்:** காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், மன அமைதிக்கான வழிபாட்டை மேற்கொள்வீர்கள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**சிம்மம்:** சுபகாரியச் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணத் தேவைகள எளிதில் பூர்த்தியாகும், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** சிந்தனை மிகுதியான நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ரோக பயமுண்டு.

**துலாம்:** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும் நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுறுசுறுப்பாக செயற்படுவீர்க்ள், போசன சுகமுண்டு.

**கன்னி:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், பேச்சில் கனிவு பிறக்கும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பெரியோரின் உதவியுண்டு.

# வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி இம்மாத இறுதியில் கைதடியில் திறப்பு

## ஆளுநர் ராகவன் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடமர்காணக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைமைக் காரியாலயம் இம்மாதம் இறுதியில் கைதடியில் திறந்துவைக்கப்படும் என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடமாகாண மக்களின் கமத்தொழில், கமத்தொழில் துறைசார் முறைகள் மற்றும் மீன்பிடித் தொழில் ஆகியவற்றை உத்வேகப்படுத்தும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர கடன்களை வழங்கும் திட்டம் இவ் வங்கி ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் என அவர்மேலும் தெரிவித்தார்.(இ-10)

# டிப்பர் மோதியதில் நீர்க்குழாய் சேதம்



(அராலி)

பொன்னாலை வீதியால் மண் ஏற்றிச் சென்ற டிப்பர் வீதியை விட்டு விலகி நீர்வழாங்கல் வடிகால் அமைப்புச் சபையின் நீர் விநியோகக் குழாயை உடைத்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்றது.

வாகனம் வேகக் கட்டுப்பாட்டையிழந்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டது. சாரதி சிறு காயங்களுக்குள்ளானார். (இ-104)

# மரமுந்திரிகை உற்பத்தியை அதிகரிக்க ஒரு குடும்பத்திற்கு 2 ஏக்கர் காணி

## வடக்கு ஆளுநர் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

மன்னார், பூநகரியில் மரமுந்திரிகை உற்பத்தியை அதிகரிக்க ஒரு குடும்பத்திற்கு இரு ஏக்கர் காணி வீதம் 50 குடும்பங்களுக்கு 100 ஏக்கர் காணி வழங்கப்படும் என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

மன்னார், பூநகரி ஆகிய பிரதேசங்களில் மரமுந்திரிகை உற்பத்திக்கான சாதகமான சூழல் நிலவுவதால் குறித்த பகுதி மக்களை மரமுந்திகை உற்பத்தியில் ஊக்குவிப்பதற்காக ஐம்பது குடும்பங்களை கூட்டுறவு சங்கமாக இணைத்து குறித்த காணி பகிர்ந்தளிக்கப்படும்.

வடமாகாண மரமுந்திரிகை திணைக்களத்தின் முன்மாதிரியான பண்ணையை அடிப்படையாகக்கொண்டு அத்திணைக்கள அதிகாரிகளின் ஆலோசனை, வழிகாட்டலில் குறித்த மரமுந்திரிகை உற்பத்திக் கூட்டுறவுப் பண்ணைகள் செயற்படுத்தப்படும் என ஆளுநர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# ஆலமரம் சரிந்ததில் ஆலயம் சேதம்



(கரணவாய்)

தொண்டைமானாறு ஆலடி வைரவர் ஆலயத்தடியில் இருந்த ஆலமரம் சரிந்து விழுந்ததில் ஆலயத்திற்கு சேதம் ஏற்பட்டது.

கடந்த வியாழக்கிழமை கடும் காற்று வீசிய நிலையில் ஆலயத்திற்கு அருகில் இருந்த சுமார் 50 வருடங்கள் பழைமை வாய்ந்த ஆலமரம் சரிந்து விழுந்தது. (இ-60)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று 12 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் ஈச்சமோட்டை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். (இ)

# இசையரங்கின் ஏழாம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் ஏழாம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெறும்.

இன்று குழு இசை, இசைக்கச்சேரி என இரு நிகழ்வுகள் இடம் பெறும். கோப்பாய் தேசிய கல்வியியற்கல்லூரிபழையஆசிரியமாணவர்களின் குழு இசையில் வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-சி.மகேந்திரன், நெறியாள்கை-விக்கினேஸ்வரி நரேந்திரா ஆகியோரும் இசைக்கச்சேரியில் பாட்டு-எம்.எஸ்.பிரதீபன், வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-ம. லோகேந்திரன், கெஞ்சிரா-எஸ். சுலக்சன் ஆகியோரும் பங்கேற்பர். (இ-7)

# 19 ஆவது திருத்தம் தொடர்பில் நல்லூரில் விரிவாக ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

யாழ். முகாமையாளர் சம்மேளனம் "சனிக்கிழமை ஆய்வுக் கருத்தரங்கு" எனும் தலைப்பிலான நிகழ்வொன்றை புதிதாக ஆரம்பித்தது. இதன் மூன்றாவது நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10.15 மணி முதல் நல்லூரிலுள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தக் கருத்தரங்கு "19 ஆவது திருத்தம்" எனும் தலைப்பில் இடம்பெற்றது.

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் இணைப்பாளர் வி. நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் பயிலுநர் சட்டத்தரணி மோகனேஸ்வரன் ரமணன், ஜே.வி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகர், வடமாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் மனித வள மேம்பாடும் அபிவிருத்தியும் பிரிவின் முன்னாள் பிரதிச் செயலாளரும், யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் செயலாளருமான சிவசிதம்பரம் கிருஸ்ணானந்தன் ஆகியோர் பிரதான கருத்துரைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடலும் இடம்பெற்றது. திறந்த கலந்துரையாடலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் திருநாவுக்கரசு சிறிதரன் (சுகு), வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் இ. ஜெயசேகரன், ஓய்வுநிலைப் பொறியியலாளர் எஸ்.சூரியகுமார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் .ஊடகத்துறை விரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜா, சட்டக் கல்லூரி மாணவன் நிக்கிலஸ் டிலான் ஆகியோர் 19 ஆவது திருத்தம் தொடர்பில் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

குறித்த கருத்தரங்கு மற்றும் கலந்துரையாடலின் போது 19 ஆவது திருத்தத்திலுள்ள சாதக, பாதகங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-9)



இலங்கை வங்கியின் 80 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கியின் 2 ஆம் கிளையின் முகாமையாளர் பரதன் தலைமையில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.





நீர்வேலி காமாட்சி அம்பாள் கோவிலில் கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற வரலட்சுமி விரத பூஜை வழிபாட்டின்போது வருகை தந்த மலேசியா கோலாலம்பூர் ஜெய நிர்த்த கலாலய பள்ளியின் நடனக் குழுவினரின் நிகழ்ச்சியின் போது...

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## அருட்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷியின் 109 ஆவது ஜெயந்தி தினமும் ஞானாசிரியர் கௌரவிப்பு நிகழ்வும்- 14.08.2019

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மகான் உலக சமாதானத் தூதுவர் அருட்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் 14.08.1911 ஆம் வருடம் உலக உத்தமர்கள், ஆன்மீகவாதிகள், சித்தர்கள் தோன்றிய இந்தியத் திருநாட்டின் தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகிலுள்ள கூடுவாஞ்சேரி கிராமத்தில் உலகையே உய்விக்க விணைப்பதிவு எனும் தொற்றுநோயிலிருந்து உலக மக்கள் அனைவரையும் விடுவித்து சாதி, மத, இன, மொழியால் பிரிவுபட்டிருக்கும் மனித இனம் தோன்றிய முதற்பொருளை பாமரமக்கள் முதற்கொண்டு விண்ணில் பறக்கும் விஞ்ஞானிகளுக்கும் விளங்கும் வகையில் எளிமையாக எடுத்துரைத்து போர் அற்ற உலக அமைதியே தனது உன்னத நோக்கமாகக் கொண்டு பிறந்தார்.

எமது குருவின் ஜனன தினமானது யாழ்ப்பாண மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஸ்தாபகரும் மனவளக்கலை பேராசிரியருமான அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்களின் தலைமையில் கொண்டாடப்படவுள்ளது என்பதோடு தமது அன்றாடக்கடமைகளுக்கு நடுவே ஆசானின் அருட்தொண்டுக்காக தொண்டு செய்தால் கொண்டு வந்த வினை கழியும் எனும் மந்திரத்திற்கு அமைவாக தினமும் காலை.மாலை அருட்தொண்டு ஆற்றிவரும் எமது அருள்நிதிகள் மற்றும் துணைப்பேராசிரியர்களை கௌரவிப்பதோடு மட்டுமல்லாது ஏனைய அருள்நிதிகளும் எதிர்காலத்தில் அருட்தொண்டாற்றுவதை ஊக்கப்படுத்துமுகமாக விருது வழங்கும் வைபவமும் நடைபெறும்.

**காலம்** : 14.08.2019 புதன்கிழமை
**நேரம்** : பிற்பகல் 4.30 மணி
**இடம்** : யாழ் அறிவுத்திருக்கோவில்

| | |
|---|---|
| வரவேற்புரை | -துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன் அவர்கள் (செயலாளர் யாழ்ப்பாணம் மனவளக்கலை அறக்கட்டளை) |
| வாழ்த்துரை | -அருள்நிதி த.குழந்தைவேல் அவர்கள் (உபதலைவர் யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை) |
| தலைமை | -மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் (தலைவர் யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை) |
| பிரதம விருந்தினர் | -திரு.என்.சண்முகலிங்கன் (முன்னை நாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்) |
| வேதாத்திரிய சிந்தனைகள் | -அருள்நிதி குணசிங்கம் அவர்கள் அருள்நிதி தவமணிதாசன் அவர்கள் அருள்நிதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் அருள்நிதி ஜெயராணி கந்தசாமி அவர்கள் |
| சிறப்புரை | -மனவளக்கலைப்பேராசிரியர் அருள்நிதி உழவன்முத்துவேல்அவர்கள் (தமிழ்நாடு. இந்தியா) |
| நன்றியுரை | -அருள்நிதி பொ.ஜமுனாதேவி |

**மேலும் பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை மாலை 5.00 மணியிலிருந்து 7.00 மணி வரை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

(C-7255)

அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுன் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். 021-222 2772



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற
- பில்லி சூனியங்கள் அகற்ற வேண்டுமா?

இரகசியம் பேணப்படும்

**ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்**
**சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்**

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**றெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153, 076 841 1848

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



தேசிய லொத்தர் சபையின் யாழ்ப்பாணம் முகவர் க்னகலிங்கம் திலகவதி விற்பனை செய்யப்பட்ட 10.08.2019 "மகாஜன சம்பத" விசேட சீட்டிழுப்பில்

## Toyata wigo
**40 இலட்சம் பெறுமதியானகார்**

ஒன்று வெல்லப்பட்டுள்ளது. கனகலிங்கம் திலகவதி முகவரின் ரிக்கற்றுக்களை யாழ்.நகரம், திருநெல்வேலி சந்தி, கைதடிச் சந்தி, இணுவில் சந்தி ஆகிய இடங் களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதான விற்பனை நிலையம், நவீன சந்தை கட்டடத் தொகுதி கீழ்த்தளம் (யாழ்ப்பாணம்.)

(9885)





# உங்கள் வலம்புரி
*Valampurii*

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

தொலைபேசி 222 3378, 021 221 7603

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

## 20 ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கணக்கான வாசகர் சேனையுடன் 20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட, விற்பனையில் முன்னணி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின் விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கணக்கெடுங்கள். அப்போது உண்மை புரியும்.

## இருபது ஆண்டு நிறைவில் உங்கள் வலம்புரி விசேட சலுகைக் கட்டணத்தில்

01.08.2019 தொடக்கம்

விளம்பரங்களை வெளியிடத் தீர்மானித்துள்ளது. தமிழர் தாயகம் எங்கும் வியாபித்துள்ள உங்கள் வலம்புரி 20 ஆண்டு நிறைவில் இன்னும் புதுப்பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

# சுட்டும் முகநூல் 08

**புவிதாசன் தமிழ்**
20 hrs ·

நல்லூர் கந்தன் இந்த ஆண்டு தனது பக்தர்களுக்கு இரண்டு மடங்கு அருள்பாலிக்க வேண்டும். அந்தளவுக்கு சோதனைகள் அதிகம் அந்த சோதனைகளை முடித்துக் கொண்டு அல்லவா முருகனை பார்க்க வேண்டும்!!



**Warna Danish**
1 August at 08:41 ·

தனியார் துறையின் தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்தல் மற்றும் உற்பத்தித்துறையின் விரிவாக்கல் ஊடாக இளைஞர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பை வழங்கலாம். இதனூடாக அரச சேவைத்துறையின் செலவீனங்கள் கட்டுப்பட்டு நாட்டின் அபிவிருத்தி மேம்படும். வேலைவாய்ப்பின்மையும் குறைவடையும். நாம் சொன்னா யார் கேட்கப்போறா?


**Ratheesh Lotus**
5 August at 21:54 ·

யாரையாவது தலையில் தூக்கி வைத்து கொண்டாட நினைத்தால் குழந்தைகளை தூக்கி வைத்து கொண்டாடுங்கள்.
ஏனெனில் பாரமும் இருக்காது அவர்களிடம் துரோகமும் இருக்காது...



**Pranavan Kanna**
1 hr ·

நல்ல வேளை குண்டு
வெடிச்ச பிறகு
பொலித்தீன் Bagல தான்
புத்தகம் கொப்பி கொண்டு
வர வேணும் எண்டு
சொன்ன மாதிரி
நல்லூருக்கு
இப்பிடி உடுப்பு போட்டு வர
வேணும் எண்டு சொல்லல...



**அன்பு வாசகர்களே! சுட்டும் முகநூல் என்ற புதியதொரு களம் உங்கள் கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது. முகநூல்களில் நீங்கள் இரசித்து பார்த்த அல்லது உங்கள் முகநூல் பக்கத்தில் நீங்கள் முன்வைத்த ஆழமான-யதார்த்தமான கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவிடப்படும். இதற்கு உதவியாக முகநூலில் வெளிவரும் அறிவார்ந்த கருத்துக்களை www.facebook.com/valampurii எனும் தளத்தில் உள்பெட்டி (Messenger) ஊடாக அனுப்பி வைக்கலாம்.**

# அலிஸ் வெல்ஸ் - மகிந்த சந்திப்பு



(கொழும்பு)
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய, ஆசிய விவகாரங்களுக்கான முதன்மை உதவிச் செயலாளர் அலிஸ் வெல்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்த அவர், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார்.

விஜேராமவிலுள்ள மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (இ-7)

# இம்ரானின் கையில் விலங்கு இருந்தது

## சுதந்த தேரருக்கு ருவான் பதில்

(கொழும்பு)
பாதாள உலகக்குழு உறுப்பினர் கஞ்சிபான இம்ரானுடன் இருக்கும் பொலிஸ் உயர் அதிகாரிகள் அவருடன் கலந்துரையாடும் போது இம்ரானின் கையில் விலங்கு இடப்பட்ட நிலையிலேயே காணப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மாகல்கந்தே சுதந்த தேரர், போட்டுக் காட்டிய வீடியோ காட்சி குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கஞ்சிபான இம்ரானுடன் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் இருவர் சுமுகமான முறையில் சிரித்துக் கதைத்துக் கொண்டிருக்கும் வீடியோ காட்சியொன்று தன்னிடம் காணப்படுவதாகவும் அதனை பொலிஸ் தலைமையகத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும் தேரர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு கஞ்சிபான இம்ரானுடன் உறவு கொண்டுள்ளவர்கள் மேற்கொள்ளும் விசாரணையில் நம்பிக்கை வைக்க முடியாது எனவும் தேரர் இந்த வீடியோ காட்சியின் ஊடாக சுட்டிக் காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திடீரென முறிந்து விழுந்த தென்னை
## தெய்வாதீனமாக உயிர்தப்பிய இளைஞன்



(கரணவாய்)
கடும் காற்றால் தென்னை மரம் முறிவடைந்து விழுந்ததில் வீதியில் பயணித்த இளைஞன் ஒருவர் தெய்வாதீனமாக காயங்களின்றி உயிர் தப்பித்துக் கொண்டார். திக்கம் நீரவளப் பிள்ளையார் கோவிலடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த இளைஞன் வீதியால் சென்று கொண்டிருந்த போது கடும் காற்று வீசியது. அப்போது வீதிக்கு அருகில் இருந்த தென்னைமரம் முறித்து மின் வயர்களையும் அறுத்துக் கொண்டு விழுந்தது. இதனால் துவிச்சக்கரவண்டி சேதமடைந்த போதிலும் அவ் இளைஞன் காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பிக் கொண்டார். (இ-60)

# இராணுவ ட்ரக் மோதி இளம்தேரர் உயிரிழப்பு

(அநுராதபுரம்)
இராணுவ ட்ரக் மோதி 36 வயது தேரர் ஒருவர் உயிரிழந்தார். நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் அநுராதபுரம், மதவாச்சி பொலிஸ் பிரிவிலுள்ள வெலிஓயா சந்திக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (இ-7)

# எமது உரிமைகளை வென்றெடுக்க இளையோர் ஒன்றிணைய வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு



(வவுனியா)

இளைஞர், யுவதிகள் எமது அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளை வென்றெடுக்க இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி முன்வரவேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று தமிழ் மக்கள் கூட்டணி அலுவலக திறப்பு விழாவிலும் அக்கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இளைஞர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டியிலும் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு-கிழக்கில் இருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலை இல்லாத பிரச்சினை என்பது பாரிய பிரச்சினை.

2015 ஆம் ஆண்டு எங்களுக்கு கிடைத்த ஒரு பொற்காலம். இந்த நான்கு வருடகாலம் எங்களுடைய மக்களினுடைய அரசியல் உரிமைக்காக அல்லது எங்களுடைய இளைஞர்,யுவதிகளுடைய வேலைவாய்ப்புக்காக அல்லது போரால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த மக்களுடைய விடுதலைக்காக எவ்வளவு தூரம் காத்திரமாக எங்களுடைய தமிழ் தலைமைகள் ராஜதந்திர ரீதியாக நடந்து இருக்கிறார்கள் என்பது பல்வேறுபட்ட விமர்சனத்துக்கு உட்பட்ட பிரச்சினையாக இருக்கிறது.

மீண்டும்உரிமைகளைவென்றெடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக இன்னும் நான்கு மாத காலத்திலே ஒரு ஜனாதிபதி தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்த ஜனாதிபதி தேர்தல் தமிழர்களுடைய கையிலே தான். நாங்கள் அளிக்க போகிற ஜனநாயக ரீதியான இந்த வாக்குரிமை தான் இந்த நாட்டினுடைய ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிக்க இருக்கிறது. ஆகவே அந்த சந்தர்ப்பத்தை எப்படி நாங்கள் பயன்படுத்தப்போகின்றோம் என்பது சவாலாகும்.

பல்வேறுபட்ட கூறுகளாக இருக்கக்கூடிய நாங்கள் குறைந்த பட்சம் இந்த ஜனாதிபதி தேர்தலில் அனைத்து கட்சிகள், மத தலைவர்கள், சிவில் அமைப்புகள், இளைஞர்கள்,பொதுமக்கள் எல்லோரும் சேர்ந்து கடந்த அறுபது எழுபது வருட காலமாக இந்த நாட்டை ஆட்சி செய்த அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு செய்த அட்டூழியங்களில் இருந்து மீண்டெழ வேண்டுமாக இருந்தால் நாங்கள் ஒரு சரியான காத்திரமான முடிவெடுக்க வேண்டும்.

இந்த நான்கு வருட காலமும் அதை சரியான முறையிலே பயன்படுத்தத் தவறி இருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு எங்களுக்கு முன்னால் இருக்கக்கூடிய பல பிரச்சினைகளை தீர்ப்பதற்காகத்தான் விக்னேஸ்வரனுடைய தலைமையில் ஒன்று கூடியுள்ளோம்.

இந்தக்கட்சியினுடைய கொள்கையை ஏற்றுக்கொண்டு செல்லக்கூடிய பல்வேறுபட்டவர்களும் இணைந்து செயற்பட வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கடந்த காலத்திலே விட்ட தவறுகளும் தற்போது விட்டுக் கொண்டிருக்கிற இந்த தவறுகளை தான் இன்றைக்கு நாங்கள் ஒரு மாற்று தலைமை நோக்கி செல்ல வேண்டிய ஒரு நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.

ஆகவே தமிழ் மக்களுக்கு ஒரு புதியமாற்று அரசியல்தலைமை ஒன்று தேவை. அது விக்னேஸ்வரனுடைய தலைமையில் தான். வடக்குக் கிழக்கிலே பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள், பொதுமக்கள்,புத்திஜீவிகள், பல்வேறு பட்ட அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து நாங்கள் தமிழ் மக்களினுடைய அரசியல் உரிமையை வென்றெடுப்பதற்கும் தமிழ் மக்களுடைய அன்றாட பிரச்சினைகளுக்கான தீர்வு காணுவதற்காக இது தான் எங்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய ஒரு இறுதிச் சந்தர்ப்பம்.

ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆகவே இளைஞர்,யுவதிகள் எமது அரசியல் உரிமை மற்றும் பொருளாதார உரிமைகளை வென்றெடுக்க இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி முன்வர வேண்டும் என தெரிவித்தார். (9-299)

# 10 ஆயிரம் விகாரைகளுக்கு குர்ஆன் பிரதிகள் அடிப்படைவாதிகள் குறித்து அதிர்ச்சித் தகவல்!

(கொழும்பு)

தௌஹீத் அடிப்படைவாத அமைப்பினர் இந்நாட்டிலுள்ள 10 ஆயிரம் விகாரைகளுக்கு குர்ஆன் பிரதிகளை வழங்க நடவடிக்கை எடுத்ததாக பயங்கரவாத எதிர்ப்பு தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ரிஸாம் அரூஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தௌஹீத் அடிப்படைவாதிகளின் புதிய நடவடிக்கையாக இந்த குர்ஆன் பிரதி வழங்கும் நிகழ்வு அமையவுள்ளது. இதனை இரகசியமான முறையில் விநியோகிப்பதற்கும் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்காக 37 இலட்சம் ரூபாய் நிதியை அவர்கள் சேகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த குர்ஆன் பிரதியை விநியோகிக்க அவர்களிடம் நடுத்தர சிந்தனையில் உள்ள குழுவொன்று உள்ளதாகவும், இவர்களில் பௌத்த மதத்திலிருந்து இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்களும் காணப்படுவதாகவும் அரூஸ் தெரிவித்தார்.

இத்தகையவர்களில் விகாரைகளுடன் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணுவோரும் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பான அவர்களது குரல் பதிவுகளும் தன்னிடம் உள்ளதாகவும், அதனால் பொறுப்புடன் இந்த அறிவிப்பை விடுப்பதாகவும் அரூஸ் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இந்த குர்ஆன் பிரதிகளை இரண்டு மாதத்துக்குள் விநியோகித்து முடிக்கவுள்ளதாகவும், இந்த குர்ஆன் பிரதிகள் இந்தியாவின் கொல்கத்தாவிலிருந்து வரவுள்ளதாகவும், அங்குள்ள பீ. ஜெய்னுலாப்தீன் என்பவரிடமிருந்தே இவை பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் போதையில் இருந்ததால் பரபரப்பு

(மன்னார்)

நானாட்டான் அரிப்புத்துறை வீதியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் நானாட்டான்பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

குறித்த வைத்தியசாலையில் கடமையில் வைத்தியர் எவரும் இல்லாத நிலையில், சிறிது நேரத்தின் பின்னர் வைத்தியர் ஒருவர் விடுதியில் இருந்து வைத்தியசாலைக்கு வந்திருந்தார். அவர் மது போதையில் வந்ததால் பொது மக்கள் கோபமடைந்து குறித்த வைத்தியசாலையில் சிறிது நேரம் பதற்ற நிலை ஏற்பட்டது. பின்னர் நோயாளர் காவு வண்டி மூலம் விபத்திற்குள்ளான இருவரும் மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

வைத்தியசாலையில் வைத்தியர் கடமையில் இருக்காதது ஏன்? என மக்கள் நானாட்டான் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியரிடம் கேட்ட போது பதில் வழங்கிய குறித்த வைத்தியர் தனது கடமை நேரம் முடிந்து விட்டது. அதுதான் இருக்கவில்லை என பதில் வழங்கியுள்ளார். அவசர சிகிச்சைகளுக்கு செல்கின்ற போது குறித்த வைத்தியர் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரச்சினை தொடர்பாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. காண்டீபனை தொடர்பு கொண்டு கேட்டபோது, நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற குறித்த வைத்தியர் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. விடுமுறை நேரம் எனில் முறையாக எமக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவர் அப்படி செய்யவில்லை.

கடமை நேரத்தில் போதையில் இருந்தது உறுதி செய்யப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (9-285)

# குறை'களை' பதிகம் 79

## கசக்கிப் பிழியும் கல்வி நிலையங்கள்

வெளியே விளையாடச் சென்ற
பிள்ளையை வீட்டுக்குள்
வரவைக்க பெரும்பாடாய் இருந்தது
அன்றைய அன்னையர்க்கு

வீட்டுக்குள் தொலைபேசியில்
விளையாடும் பிள்ளைகளை
மைதானம் கூட்டிச் செல்ல
பெரும்பாடு படுகிறார்
இன்றைய அன்னையர்

தொழில்நுட்பம் வளர்ந்தது
எம் தொன்மை எல்லாம் சிதைந்தது
துள்ளி விளையாட வேண்டிய
சின்னப் பிள்ளைகளை
சீர்கெட்ட கௌரவத்துக்காய்
துணியாய் பிழிந்தெடுக்கிறோம்

காலை ஐந்து மணிக்கு பிரத்தியேக வகுப்பு
எட்டு மணிக்கு பள்ளிக்கூடம்
இதன் இடையில்தான்
குளிப்பாட்டல், சாப்பாடு இணைந்துவிடுகிறது

மதியம் பாடசாலை முடிந்ததும்
மருதத்தின் பத்துரூபாய் வடையுடன்
பின்னேர வகுப்புக்கு
பிளைட்டாய் பறக்கிறது பிள்ளை

ஐந்து மணிக்கு அது முடிய
சிறிப்பாய்ந்து வீடு வந்து
சாப்பாட்டை ஊட்டி முடிக்க
ஆறு மணி அடிக்கும்
அடுத்தது என்ன... இராப்படிப்பு

ஆற அமர பிள்ளை
தமக்கு பிடித்ததை பிடித்தது போல
படித்து முடிக்க இடம்கொடா
மடிக்கிறோம் முடிக்கிறோம்
அவர் கனவுகளை

பாடசாலை நாட்களில் இதுவென்றால்
விடுமுறை நாட்களை நினைத்தால்
நெஞ்சம் வெம்மி வெடிக்கிறது

ஐந்து நிமிடங்கள் கூட
பிஞ்சுகளுக்கு ஓய்வு கொடுக்கா
கல்வி நிலையங்களின் கற்பித்தல்
அப்பப்பா இதுவோ எம் ஜனநாயகம்
என்று எண்ணத் தோன்றுகிறது

கல்வி நிலையத்து ஆசான்களே
பதறியடித்தோடும் பெற்றோரே
வார இறுதி விடுமுறை நாளையேனும்
பிள்ளைகளுக்காய் ஒதுக்கிடும்

அவர் விரும்பிய இடத்துக்கு
அழைத்துச் செல்லும்
வேண்டியதெல்லாம் வாங்கிக்கொடும்
இயற்கையையும் இயல்பையும்
அவருக்கு கற்றுக்கொடும் - அதற்கு
தரம் ஐந்துதான் வாழ்க்கையென்ற
உம் மன அழுக்கை அகற்றும்
எல்லாம் சரிவரும்


மாவை. நா.கஜேந்திரன்

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை'பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# செஞ்சோலை படுகொலை நினைவுத்தூபியில் மாணவர்களின் புகைப்படங்கள் பதிக்கத் தடை

## பணியை முன்னெடுத்தவர்கள் பொலிஸ் விசாரணையில்



(பனிக்கன்குளம்)

இலங்கை இராணுவத்தின் விமான தாக்குதலில் கொல்லப்பட்ட மாணவர்களின் நினைவுத் தூபி ஒன்று வள்ளிபுனம் பகுதியில் அமைக்கப்பட்டு வந்த நிலையில் இந்த நினைவுத் தூபியில் மாணவர்களின் படங்களை பதிப்பதற்கு தடை விதித்துள்ள பொலிஸார் குறித்த பணிகளை முன்னெடுத்தவர்கள் சிலரை நேற்று காலை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் வருமாறு அழைத்துள்ளனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில் இலங்கை விமானப் படையின் விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் 53 மாணவர்கள் குறித்த வளாகத்தில் பலியாகியிருந்தார்கள். இவர்களுடைய 13ஆவது ஆண்டுநினைவு நாள் எதிர்வரும் 14 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் இவர்களின் நினைவு சுமந்து வள்ளிபுனம் செஞ்சோலை செல்கின்ற வீதியில் பாரிய வீதி வளைவு ஒன்று அமைக்கப்பட்டது.

அனைத்து திணைக்களங்களின் அனுமதி பெறப்பட்டு குறித்த வீதியில் நினைவுத் தூபி அமைக்கப்பட்ட போதும் குறித்த நினைவுத் தூபியில் மாணவர்களின் படங்களை பதிப்பதற்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

அத்தோடு குறித்த பணிகளை முன்னெடுத்த சிலரை நேற்றுக்காலை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்திருக்கிறார்கள்.

குறிப்பாக இலங்கையில் கொல்லப்பட்ட மக்களுடைய நினைவு தினங்கள் நினைவாலயங்கள் அமைப்பதற்கு தொடர்ச்சியாக அரசு தடைவிதித்து வருகின்ற நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (9-281)

# வவுனியாவுக்கு அமைச்சர் நவீன் விஜயம்



(நெளுக்குளம்)

பெருந்தோட்ட கைத்தொழில் துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க வவுனியாவுக்கு நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

பெருந்தோட்ட கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் தென்னை பயிர்ச் செய்கை சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தென்னை அபிவிருத்தி திட்ட நிகழ்வில் கலந்து கொண்டு விவசாயிகளிற்கு மானியங்களை வழங்கிவைப்பதற்காகவே அமைச்சர் விஜயம் செய்திருந்தார்.

இதன்போது வவுனியா மற்றும் மன்னாரில் தென்னை பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் 600 பயனாளிகளிற்கான உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அவற்றில் 300 பேருக்கு 30 இலட்சம் பெறுமதியான காசோலைகளும், 300 பேருக்கு தென்னை பயிர்உட்பட உள்ளீடுகளும் வழங்கி வைக்கபட்டன.

தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் பெ.உதயசந்திரன் தலைமையில் வவுனியா சாம்பல் தோட்டம் பகுதியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் எ.ரஞ்சித், மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், தென்னை அபிவிருத்தி சபையின் தலைவர் மற்றும் பயனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (9-250-299)

# தமிழ் மக்கள் கூட்டணி அலுவலகம் வவுனியாவில் திறப்பு





முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ்மக்கள் கூட்டணியின் கட்சி அலுவலகம் வவுனியா மன்னார் வீதி கற்பகபுரம் பகுதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. காலை 9 மணிக்கு வவுனியா தாண்டிக்குளம் முருகன் கோவிலில் விசேட வழிபாடுகளை மேற்கொண்ட சி.வி. விக்னேஸ்வரன் மன்னார் வீதி வழியாக இளைஞர்களால் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு பின்னர் கட்சி அலுவலகத்தினை திறந்து வைத்தார். இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராஜா, கட்சியின் யாழ் ,வவுனியா மாவட்ட முக்கியஸ்தர்களான அருந்தவபாலன், சிறி மற்றும் இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (9-250-299)




# தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டம் ஆரம்பம்

(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு சங்கம் ஏற்பாடு செய்த தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் ஆரம்பமானது.

வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு சங்கத்தின் தலைவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளருமாகிய திருமதி சரோஜா குகணேசதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அ. சிங்கநாயகம், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். பாலகுமார், வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் ஜே.யூட்பிறீடா, தேசிய இளை ஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி மா.சசிகுமார், மாங்குளம் மக்கள் வங்கியின் உத்தியோகத்தர் வை.கிருஷாந் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள், இளைஞர் யுவதிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்

குறித்த பயிற்சி வேலைத்திட்டத்தில் 30 இளைஞர்கள் கலந்து கொண்டுள்ளதோடு இவர்களுக்கான வளவாளர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பான மாவட்டத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி பி.கிருபைராஜா, மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஜி.சசீந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு விரிவுரைகளை வழங்குகின்றனர்.

குறித்த தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டுள்ள இளைஞர்,யுவதிகள் தங்களது சுய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கான பயிற்சித்திட்டம் தயாரித்தல் மற்றும் வங்கிக் கடன் பெற்றுக் கொள்கின்ற நடவடிக்கைகள், தொழில்களை மேம்படுத்தக் கூடிய விடயங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய வகைகளிலான வழிகாட்டல் செயலமர்வாக இந்த செயலமர்வு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. குறித்த செயலமர்வு எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-281)

# பிளாஸ்டிக் பாவனையைத் தவிர்க்கவும் வவு.அந்தணர் ஒன்றியம் கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட ஆலயச் சூழல்களில் பிளாஸ்டிக் பாவனையைத் தவிர்க்குமாறு வவுனியா அந்தணர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தணர் ஒன்றியச் செயலாளர் மேலும் தெரிவிக்கையில்,எமது பிரதேசங்களில் தற்போது ஆலயங்களில் திருவிழாக்கள் ஆரம்பித்துள்ளன.

எனவே தூரதேசங்கள் மற்றும் வெளியூர் பக்தர்கள் உள்ளூர் வாசிகள் எனப்பலரும் ஆலயத்திற்குச் சென்றுவருகின்றனர். அவ்வாறு செல்பவர்கள் இறைவனுக்கு அர்ச்சனை செய்யும் பொருட்டு அர்ச்சனைக் கூடைகளைப் பெற்று அதனை கோவிலில் கொடுத்து அர்ச்சனை செய்வது வழமையான செயல்.

ஆனால் தற்போது தென்னிலங்கை மற்றும் பல பாகங்களில் இருந்து வியாபாரிகள் வருகை தந்து இவ்விழாக்காலங்களில் தங்கள் பொருட்களை விற்பனை செய்து கொள்கின்றனர். அதனாலே அதிகமான பிளாஸ்டிக் பொருட்களை மக்கள் கொள்வனவு செய்வதனால் அவற்றின் பாவனைகள் அதிகரிப்பதோடு தோல் வியாதிகள் வர வாய்ப்புள்ளது.

எனவே ஆலயங்கள் உள்ளூர் உற்பத்தியினை மேம்படுத்த வேண்டும்.பனை ஓலையால் பின்னப்பட்ட அர்ச்சனைக் கூடைகளை விற்பதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்க செய்யலாம். அத்தோடு அதனை ஜீவனோபாயமாக செய்பவர்களும் வாழ்க்கையில் முன்னேறலாம். எனவே பிளாஸ்டிக்கை விட இவை விலை கூடினாலும் பரவாயில்லை. எம்மவர் யாரோ தமது வாழ்வாதாரத்தினை உயர்த்திக் கொள்வார்கள்.

எனவே வெளியில் இருந்து வியாபாரிகளையோ அல்லது பிளாஸ்டிக் பொருட்களையோ ஆலயச் சூழலில் அனுமதியாதீர்கள். இதனூடாக எம்மவர் உற்பத்திகள் அதிகரிக்கும்.

எனவே அனைவரையும் வாழ வைத்து நாமும் வாழ்வோம் என மேலும் தெரிவித்தார். (9-299)

# சட்டவிரோதமாக இறால் பிடித்த 7பேர் மீனவர்களால் மடக்கிப் பிடிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி இரணைமடு குளத்தில் சட்டவிரோதமாக இறால் பிடியில் ஈடுபட்ட 7 பேர் உள்ளூர் மீனவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தடை செய்யப்பட்ட தங்கூசி வலையை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 7 நபர்களை. நேற்று முன்தினம் இரணைமடு நன்னீர் மீனவர் சங்க அங்கத்தவர்கள் பிடித்துள்ளனர். குறித்த ஏழு பேரில் ஒருவர் 13 வயது சிறுவன் என்பதால் அவரை எச்சரித்து பெற்றோரிடம் ஒப்படைத்துவிட்டு ஏனைய ஆறுபேரையும் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 30 கிலோ இறால் மற்றும் தங்கூசி வலை என்பவற்றுடன் கட்டுத்துவக்கும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டதுடன், அவற்றையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடியினால் மீனவர்களாகிய தாம் பாதிக்கப்படுவதாகவும், இந்த செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

இரணைமடுக் குளத்தில் பிடிக்கப்படும் இறால் ஏற்றுமதி பொருள் என்பதால் அதன் பெறுமதி கிலோ ஒன்று 1000 ரூபா என்பது குறிப்பிடத்தக்கதாகும். (9-312-350)

# நில அபகரிப்புக்கு தீர்வுகள் பெற்றுத் தராவிட்டால்

# ஒரு வருடத்திற்குள் எமது பகுதிகளிலிருந்து வெளியேறுவோம்

## கொக்குத்தொடுவாய் மக்கள் ஆதங்கம்



(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதிகளில் இடம்பெறும், நில அபகரிப்புகளுக்கு தீர்வுகள் பெற்றுத் தராவிட்டால், தமது பகுதிகளிலிருந்து இன்னும் ஒரு வருடத்திற்குள் தாம் வெளியேறும் நிலை ஏற்படுமென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கூட்டத்தில், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் ப.சத்தியலிங்கம் ஆகியோரிடமே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத் தொடுவாயினைப் பொறுத்தவரையில், 1984ஆம் ஆண்டிற்கு முன்னர் தமிழ் மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த குளத்தின் கீழான விவசாய நிலங்கள் அனைத்தும் அபகரிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படாதிருக்கின்ற நிலையில், தற்போது ஏனைய பகுதிக் காணிகளும் அபகரிப்புச் செய்யப்படும் முயற்சி இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறான அபகரிப்புச் செயற்பாடுகள் சில அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடன்தான் இடம்பெறுவதாக நாம் உணர்கின்றோம். ஏனெனில் அரச அதிகாரிகளிடம் அபகரிப்புகள் தொடர்பில் தெரியப்படுத்தும் போது நீங்கள் ஏன் அங்கு செல்கின்றீர்கள் என்பது மாதிரியான கேள்விகளைக் கேட்கின்றனர்.

நாங்கள் இந்த அபகரிப்புகள் தொடர்பில் பல தடவைகள், பலரிடமும் தெரியப்படுத்தியிருந்தபோதும் எவ்வித தீர்வுகளும் கிடைக்கவில்லை. இந்த அபகரிப்பு பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைப் பெற்றுத் தராவிட்டால், இன்னும் ஒருவருடத்திற்குள் எமது பகுதிகளை- விட்டு வெளியேறும் நிலைதான் ஏற்படும்.

ஏனெனில் அங்கு எமக்கு எவ்வித தொழில் வாய்ப்புகளுமில்லை. வாழ்வாதார காணிகள் அனைத்தும் சிங்களமக்கள் அபகரித்துள்ளதால் நாம் தொழிலுக்கு வேறு கிராமங்களுக்கு போகவேண்டிய நிலையே உள்ளது.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, அபகரிக்கப்படாது மீதமாக இருக்கின்ற காணிகளையாவது கைப்பற்றித் தரவேண்டும் என்ற நோக்கில், காணிகளைத் துப்புரவு செய்வதற்கு 20 மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளார். அவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டு ஆறு மாத காலமாகியும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இது தொடர்பில் மாவட்ட செயலகத்தில் போய்க் கேட்டும் கூட இதுவரையில் வேலைகள் இடம் பெறுவதற்கான எவ்வித நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறான நிலையில் அந்த நிதியும் திரும்பும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் மழைக்காலம் அண்மித்து விட்டதால், இனி வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து மேற்கொள்ளவும் முடியாது என மேலும் தெரிவித்தனர். (9)

## அக்கராயன் கிழக்கு பாலத்தினை விரைவாக புனரமைக்குமாறு பொது அமைப்புக்கள் வலியுறுத்தல்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் பாலத்தின் புனரமைப்பு பணிகள் இரு மாதங்களாக நிறுத்தப்பட்டு இருப்பதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் கடும் நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளனர்.

ஆயிரம் பாலங்கள் அமைக்கும் திட்டத்தில் திருமுறிகண்டி அக்கராயன் வீதியில் இப்பாலம் புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்ட போதிலும் இரு மாதங்களாக வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. பால வேலைகள் தொடங்கும் போது கிராமத்தின் வழியான மாற்றுவழி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வீதி மழை காலங்களில் பயன்படுத்த முடியாது.

மேலும் இதனைவிட அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு குறித்த பாலம் வழியாகவே பயணத்தினை மேற்கொண்டு



வந்த நிலையில் தற்போது நோயாளர்களுடன் மாற்றுவழி ஊடாகவே பயணிக்க வேண்டி உள்ளது. மேலும் அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலய மாணவர்கள் நீண்டதூரம் சுற்றி மாற்றுவழியினைப் பயன்படுத்தி பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.

எதிர்வரும் புரட்டாதி மாதத்துடன் பால வேலைகள் முடிக்க வேண்டும் என ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

தற்போதுள்ள பிரச்சினை குறித்த பால வேலைகள் நிறுத்தப்பட்டிருப்பதன் காரணமாக அக்கராயன் பிரதேச வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டி தொடர்ந்து மாற்று வழி யினைப் பயன்படுத்த முடியாது. பாடசாலை மாணவர்களும் மக்களும் மாற்று வழியினைத் தொடர்ந்து பயன்படுத்த முடியாது.

அக்கராயன் எரிபொருள் நிலையத்திற்கு எரிபொருள் கொண்டு வருவதில் குறித்த பால வேலைகளினால் தடைகள் ஏற்பட்டுள்ளன.

ஒரு போக்குவரத்து வீதியினை தடை செய்துவிட்டு வேலைகளும் இடம் பெறாமல் மக்களை மாற்று வழியினைப் பயன்படுத்துங்கள் என ஏனோதானோ என அதிகாரிகள் நடந்து கொள்வது பொது மக்கள் மத்தியில் கடும் விசனத்தினை உருவாக்கி உள்ளது.

குறித்த பால புனரமைப்பு பணிகளை வேலையினை விரைவுபடுத்தி கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கராயன் பொது அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (9-350)

## குழு மோதல்; ஒருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் ஒருவர் காயமடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் இரு பகுதியினருக்குள் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி அடிதடியில் முடிந்தது.

குறித்த மோதல் காரணமாக பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 35 வயது நபர் ஒருவர் காயமடைந்துள்ளார். இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-250)

## முல்லை.ஐயன்கன்குளம் கிராமத்தில் காடழிப்பு கட்டுப்படுத்தப்படவில்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் கிராமத்தில் தொடர்ச்சியாக காடுகள் அழிக்கப்பட்டு வெளியிடங்களுக்கு மரங்கள் கொண்டு செல்லப்படுவதாக அதிகாரிகள் அனைவருக்கும் தகவல் தெரிவித்தும் இது கட்டுப்படுத்தப்படவில்லை என பொது அமைப்புகள் விசனம் தெரிவித்துள்ளன.

ஐயன்கன்குளத்தில் பொலிஸ் காவல் பிரிவு உள்ள போதும் மரம் வெட்டுபவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் உள்ள தொடர்புகள் காரணமாகவே மரம் வெட்டுதல், மணல் அகழ்வு என்பன சட்டவிரோதமாக நடைபெறுவதாகவும் இது தொடர்பாக கடந்த பத்தாண்டுகளாக துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் கூட்டத்தின் இணைத்தலைவர்களும் துணுக்காய் பிரதேச செயலாளரும் காடுகள் அழிக்கப்படும் இடங்களைப் பார்வையிடுவதாக முடிவுகள் எடுக்கப்பட்டும் எடுக்கப்பட்ட முடிவுகள் நிறைவேற்றப்படவில்லை.

மேலும் வனவளத் திணைக்களத்தின் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன்தான் காடுகள் அழிக்கப்படுவதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் கூட்டங்களில் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் நடைபெறுகின்ற காடு அழிப்பு, மணல் அகழ்வு என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (9-350)

## பூநகரி இறங்கு துறைகளை புனரமைக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட கரையோரப்பகுதிகளில் காணப்படுகின்ற மீன்பிடி இறங்குதுறைகளை புனரமைத்துத்தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரிப்பிரதேசத்திற்குட்பட்ட கௌதாரிமுனை, மன்னித்தலை, மீனவர்களுக்குரிய இறங்குதுறைகள் மற்றும் பள்ளிக்குடா இரணைமாதா நகர் கிராஞ்சி, போன்ற கரையோரப்பகுதிகளில் காணப்படுகின்ற இறங்குதுறைகள் பல புனரமைக்கப்படாது காணப்படுகின்றன.

இதனால் கடற்றொழிலுக்கான கடற்றொழில் உபகரணங்களைக் கொண்டு செல்வதிலும் அவற்றை கரைசேர்ப்பதிலும் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த இறங்குதுறைகளை ஆழப்படுத்தி புனரமைத்துத் தருமாறு அவர்கள் கோரியுள்ளனர். இதேவேளை கரையோரப்பகுதிகளில் வெளிச்சவீடுகள் அமைக்கப்படாது காணப்படுகின்றன. இதனாலும் கடற்றொழிலாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே வெளிச்சவீடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)




## விவசாயக் கிணற்றில் வீழ்ந்த யானை உயிரிழப்பு; 5 நாட்களாக மீட்காது அதிகாரிகள் அசண்டையீனம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட சம்மளங்குளம் பகுதியில் விவசாய காணியில் காட்டுயானை ஒன்று விழுந்து உயிரிழந்துள்ளது.


விவசாயிகள் விவசாயம் செய்யும் விவசாய கிணற்றில் கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னர் குறித்த யானை விழுந்துள்ளதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு



முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளார்கள்.


சம்மளங்குளம் கிராமத்தில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக தண்ணீருக்காக யானை அலைந்து கிணற்றில் வீழ்ந்துள்ளதாக கிராம வாசிகள் தெரிவித்துள்ளார்கள்.

குறித்த கிணற்றில் வீழ்ந்த யானையினை வெளியே எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (9-281)



# யாழ்.வண்.வடமேற்
# ஸ்ரீ செல்வ விநாயகப் பெ
# ஸ்ரீ ஞானவைர
## புதிய சித்திரத் தேர் வெள்ளோ

### நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்திகள்



ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் தான்தோன்றி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்விற்கு ஆசி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

யாழ்.வண்ணை வடமேற்கு-பிரம்படி எனும் தனது-இருப்பிடத்தில் இருந்து அடியவர்கள்களைக் காத்தருளும் செல்வ விநாயகர்-ஞான வைரவப் பெருமான் ஆகிய இருவரும் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேரில் திரு வீதி உலா வரும் காட்சியைக் காண கண்கள் கோடி வேண்டும்.

இந்த அற்புத காட்சியைக் கண்டு,ஆதி மூலவர்களின் அருள் பெற இன்றைய இரதோற்சவ வடம் பிடித்திழுத்திட பக்த அடியார்கள் பல இலட்சம் பேர் ஒன்று கூடுவர் என்பதில் மகிழ்வு.

தீமைகளை அழித்து நன்மை பெற்று அடியவர்கள் இன்புற எம்பெருமானை வேண்டி இன்றைய இரதோற்சவம் சிறப்புற எனது ஆசிகளை வழங்கி அமைகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், நல்லை ஆதீன குரு முதல்வர், நல்லை ஆதீனம்.**

### ஆசியுரை



யாழ்.வண்ணார்பண்ணை பிரப்பம்பதி செல்வ விநாயகர் பெருமான் தான் தோன்றி ஞான வைரவப் பெருமானுக்கு விகாரி வருடம் மஹோற்சவத்தில் புதிய சித்திரத் தேரில் எம் பெருமான் வருவதையிட்டு பெருமகிழ்வடைவதோடு இச் சித்திரத் தேரை வடிவமைத்த திரு.செல்லையா பாலச்சந்திரன் அவர்களுக்கும் வர்ணத்தின் மூலமாக இச் சித்திரத்தேரை அலங்கரித்த திரு.செல்லையா செல்வதாஸ் அவர்களுக்கும் மற்றும் திரு பொன்ராசா அவர்களுக்கும் எமது ஆலய திருப்பணிச்சபையினரின் ஊக்குவிப்பு மற்றும் பெரு முயற்சியினாலும் பிரப்பம்பதி வாழ் மக்களாலும் பிரான்ஸ் வாழ் மக்களாலும் எம் பெருமானின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இடம்பெற இறைவன் திருவருள் கூடியிருப்பதாலும் எனது நல்லாசியும் விநாயகப்பெருமான் திருவருளும் பைரவப் பெருமானின் திருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

**ஸர்வே ஜனகா சுகினோ பவந்து**

**மஹோற்சவ குருமணி ஆகம கிரியா ஜோதி சிவஸ்ரீ பால.ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்**



**மோகன் மியூசிக் அன்ட் லைட்ஸ்**
பெரியதம்பிரான் கோயில் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்
077 703 0234

**மது ரெயிலர்ஸ்**
ஆண், பெண்
இருபாலருக்குமான
ஆடைகள்
சிறந்த முறையில்
தைத்துக் கொடுக்கப்படும்.
உரிமையாளர்
க.ஜெகதாஸ்
T.P: 021 221 6231, 076 675 9467

### ஆசியுரை



விராட் விஸ்வப் பிரம்ம
யாழ்.பிரப்பம்பதி ஸ்ரீ செல்
தோன்றி ஸ்ரீ ஞானவைரவர் பெருமானுக்கு கோடி நமஸ்காரம்

விநாயகப் பெருமானுக்கு நிர்மாணித்த சிற்பத்தேரை மாதா, பிதா, குரு ப
விடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம். இந்த புண்ணிய கைங்கரி
வர்ணக் கலைஞர்கள், பரிபாலன சபையினர்,இந்த ஊர் மக்கள், இரவு பக
இளைஞர்கள் யாவருக்கும் பெருமான் திருவருள் பெருக வாழ்த்தி வண

**ரதகலாசூரி, ரதகலாஞானி விஸ்வப்பிரம்மஸ்ரீ ஸ்தபதி செ**
**ஸ்ரீகாளிகா சிற்பாலயம், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

**சிறிமுருகன் சவுண்ட்ஸ் & வைண்டிங் வேக் சொப்**
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம். 077 666 0524

**வெள்ளை ரேனிங் வேக்சொப்**
மோட்டார் பைக்
மெக்கானிக்
இல. 984,
கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ லக்சுமி ஸ்ரோர்ஸ்**
இல. 96, பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
077 666 0524

**MAHA MINI**
MULTY CENTRE
No.1006, Nachchimar Koviladi,
Arasady Junction, K.K.S. Road, Jaffna.
021 312 6465, 021 222 5237
077 929 3573, 075 738 6332
mahaminimultycenter@gmail.com
mahaminimultycenter

துள

# மேற்கு - பிரப்பம்பதி
# பெருமான் தான்தோன்றி
# வரவர் ஆலயம்
# ளாட்ட விழா சிறப்பிதழ்-2019





## அருள் தரும் அம்மானார்கள்

யாழ்.வண்ணை வடமேற்கு பிரப்பம்பதி ஸ்ரீ செல்வ விநாயகர் பெருமான் ஸ்ரீ ஞான வைரவர் ஆலய புதிய சித்திரத் தேர் வெள் ளோட்ட நிகழ்வில் பக்த கோடிகளை பங்கு கொண்டு எம்பெரு மானார்களது அருளாசிகளை பெற்றுய்ய அழைத்து நிற்கின்றோம்.


மனிதனுக்கு துன்பம் வரும் வேளை அந்த துன்பத்தில் இருந்து விடுபட நாம் இறைவனை நாடி எமது துன்பத்தை முறையிட்டு அதை நீக்கும் படி மன்றாடுவோம்.

இப்படி யார்க்கு எந்தத் துன்பமென்றாலும் எம் பெருமான்க ளிடம் முறையிட்டால் அத்துன்பம் பறந்தோடும் என்பது கண் கூடு. அப்பேற்பட்ட அற்புதம் நிறைந்த எம் பெருமானார்களுக்கு புதிய சித்திரத்தேர் அமையப் பெறுவது மனதிற்கு மகிழ் வளிக்கிறது.

எனவே இவ் இரதோற்சவ வெள்ளோட்ட நிகழ்வு சிறப்புற அமைய அருள் வேண்டி நிற்கின்றோம்.

**ஆலய அறங்காவலர் சபையினரும்**
**தேர்த்திருப்பணிச் சபையினரும்**

## சொஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை செல்வ விநாயகர் திருக்கோவிலில் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது அறிந்மு மிகவும் ஆனந்தம் அடைகின்றேன்.

திருக்கோவில்கள் எழுச்சி பெற்றால் மக்கள் நன்மை அடைவர்.வண்ணார்பண்ணை செல்வ விநாயகர் திருக்கோவில் குறுகிய காலத்தில் பெருவளர்ச்சி கண்டு வருகின்றது. தேர்த் திருப்பணி முயற்சியில் ஈடுபட்ட அனைவரும் பாராட்டுக்குரி யவர்கள். அழகான சித்திரத் தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞர் செல்லையா பாலச்சந்திரன் அவர்களை மனதார பாராட்டுகிறேன். செல்வ விநாயகர் புதிய தேரில் வலம் வந்து எம்மண்ணில் அறம் தழைக்க அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்து அனைவருக்கும் நல்லாசி கூறி அமைகின்றேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்.**

## ஆசிச் செய்தி



ஆலயம் தொழுவது சாலவும் நன்று -ஔவையார்

இன்றைய நவநாகரிக உலகில் பல்வகை ஊடகங்கள்,தொடர்பாடல் சாதனங்கள் ஆகியன மக்களது குறிப்பாக எம் இளம் சமூகத்தினரின் நேரத்தைக் கவர்வதால் தினசரி ஆலய வழிபாடு இளம் சந்ததியினரிடையே அருகி வருகிறது.

ஆனால் ஆலயங்கள் தோறும் மஹோற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருவது சிறப்பம்சமாகும். இம் மஹோற்சவ காலங்களிலாவது மக்கள் ஆலய வழிபாட்டுக்கு தமது நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்குவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அந்த வகையில் யாழ்.வண்ணை வடமேற்கு பிரப்பம்பதி ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் தான்தோன்றி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்திருவிழா 06.08.2019 முதல் நடைபெற்று வருவதும் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று 12.08.2019 திங்கட்கிழமை நடைபெறுவதும் போற்றுதற்குரியது.

பஞ்ச கிருத்தியங்களைக் குறித்து நிற்கும் மஹோற்சவங்களில் இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும்.

அதாவது, வழிபடும் அடியார்களின் தீய குணங்களை அழிப்பதாகும். இத் தொழிலைப் புரிவதற்கு இறைவன் எழுந்தருளும் வாகனமாக இரதம் அமைகின்றது.

இவ் இரதோற்சவத்தைத் தரிசிக்கும் அடியார்கள் அன்றி லிருந்து தம்மிடம் உள்ள ஏதாவது ஒரு தீய குணத்தையாவது விடுவதாக சங்கற்பித்து அதனைச் செயற்படுத்த வேண்டும்.

இவ் வெள்ளோட்டம் மற்றும் இரத உற்சவம் ஆகியன சிறப்பாக நடைபெறவும் இதனை முன்னிட்டு வெளிவரவுள்ள சிறப்பு மலர் சிறப்பாக வெளிவரவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளையும் பூஜ்ய குரு தேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

**இறை பணியில்**
**சுவாமி சிதாகாசானந்தா**
**சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்**

ல்வப் பிரம்மனே நமக
ம்பதி ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமான் தான்
ாரம்
ா, பிதா, குரு பாதம்பணிந்து வெள்ளோட்டம்
ரிய கைங்கரியத்தில் தொண்டாற்றிய சிற்ப
கள். இரவு பகல் பாராது தொண்டு செய்யும்
வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.
**ஸ்தபதி செல்லையா பாலச்சந்திரன்,**
**ணம்.**












# ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னரே

# மாகாணத் தேர்தலை நடத்த வேண்டும்

## அரவிந்தகுமார் கூறுகிறார்

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலை முன்னரும் மாகாணத் தேர்தலை பின்னரும் நடத்த வேண்டும் என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.**



ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை கோருவோர் அரசியல் ரீதியாக வங்குரோத்து அடைந்துள்ளதாகவும் மகிந்தவின் ஆட்சியில் மாகாண சபைத் தேர்தல்களை கட்டம் கட்டமாக நடத்தி சர்வாதிகார நடைமுறையை பின்பற்றுவதாகவும், அதன் மூலம் ஜனநாயக விழுமியங்கள் மீறப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறான ஜனநாயக விரோதிகளே தற்போது மாகாணசபைத் தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டும் என துடிப்பதாகவும் இதன்மூலம் அவர்களின் அரசியல் வங்குரோத்து நிலைமை நன்றாகப் புலப்படுவதாகவும், ஒன்பது மாகாண சபைகளின் தேர்தல்களும் ஒரே தினத்தில் நடைபெற வேண்டும் என்பதே தனது நிலைப்பாடு என்றும் தெரிவித்தார்.

இதுவரை ஊவா மாகாண சபை தவிர ஏனைய 8 மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுள்ள நிலையில், மாகாண சபை தேர்தல்கள் அனைத்தும் ஒரே தடவையில் நடக்க வேண்டும் எனக் கூறுவது தெளிவான அரசியல் நோக்கத்தை வெளிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே தற்போதைய சூழலில் ஜனாதிபதித் தேர்தல் முக்கியமானதாய் இருப்பதால் அதனை நடத்துவதே ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் செயற்பாடாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதனைவிடுத்து முன்னைய ஆட்சியை போன்று கட்டம் கட்டமாக தேர்தலை நடத்தி மாகாண சபையை கைப்பற்றிய மோசமான நிலைமைக்கு மீண்டும் செல்ல முடியாது எனவும், அவ்வாறு நடந்தால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மட்டக்களப்பில் கோர விபத்து இருவர் பலி; ஒருவர் படுகாயம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, நாவற்குடா வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஏறாவூரிலிருந்து கோழிகளை ஏற்றிச் சென்ற வான் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பிரதான வீதியில் மணல் ஏற்றிக் கொண்டு முன்னாள் சென்ந டிப்பர் வாகனத்துடன் மோதுண்டதிலே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

டிப்பர் வாகனத்தின் டயர் வெடித்ததன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த காத்தான்குடி பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

கம்போடியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குழுவினர் நேற்று அதிகாலை 12.55 மணியளவில் நாடுதிரும்பினர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குழுவினர் கம்போடியாவிற்கு 4 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கடந்த 7 ஆம் திகதி பயணமானார்கள்.




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது குழுவினரும் நான்கு நாட்கள் பயணமாக கம்போடியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## போரும் சமாதானமும்

இந்த உலகத்திலே எல்லோரும் சமாதானத்தைப் பற்றித் தான் பேசுகிறார்கள். ஆனால் அப்படி பேசிக் கொண்டே அவர்களுக்குள்ளே சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். மிகவும் வேடிக்கையான உலகம்!

ஏன் இப்படி சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டால் "நாங்கள் சமாதானத்தை காப்பாற்றுவதற்காக சண்டை போட்டுக் கொள்கிறோம்" என்று விளக்கம் கொடுக்கிறார்கள். அதன் பின் அவர்களிடம் என்னத்தைப் பேசுவது. உலகத்திலே மனித குணம் குறைந்து கொண்டே வருகின்றதா? இப்படி யோசித்துக் கொண்டிருந்த போது ஒரு பெரியவர் எழுதியிருந்த கட்டுரை ஒன்று கண்ணிலேபட்டது.

2 ஆம் உலக யுத்தம் முடிந்த சமயத்திலே அவர் ஒரு நாவலைப் படித்தாராம். அந்த நாவலுடைய பெயர் ஏப்அண்ட் எஸென்ஸ்! அந்தக் கதையை சுருக்கமாக அவர் சொல்லியிருந்தார். அதை உங்களுக்கு சொல்லப் போகிறேன். ஹொலிவுட்டிலே இருக்கின்ற ஒரு சினிமா ஸ்ரூடியோ! அதற்கு எதிரே 2 சினிமா ஆட்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

காந்தி மகான் அமரரான நாள் அது. அதைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்திலே ஸ்ரூடியோவிலிருந்து குப்பை ஏற்றிக் கொண்டு வந்த லொறி அவர்கள் முன்னாடி திரும்பியது. அப்படி திரும்பிய வேகத்தில் குப்பை காகிதங்களில் இரண்டு புத்தகங்கள் நழுவி கீழே விழுந்தது.

இவர்கள் எழுந்து ஓடிப் போய் அதை எடுத்துப் பார்க்கிறார்கள். வில்லியம் டாலிஸ் என்ற எழுத்தாளர் எழுதிய திரைக்கதை அது. சினிமா எடுப்பதற்கு அது சரிவராது என முடிவு செய்து குப்பைத் தொட்டியில் போட்டிருக்கிறார்கள். புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தால் ஏப் அண்ட் எஸென்ஸ் எனும் தலைப்பு கொடுத்திருக்கிறார் அந்த எழுத்தாளர்.

இவர்கள் அதைப் படித்துப் பார்க்கிறார்கள். திரைக்கதை மிகவும் அருமையாக இருக்கிறது. இவ்வளவு அற்புதமாக எழுதியிருப்பவரை பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அந்த கையெழுத்துப் பிரதியிலே அவர் விலாசம் இருந்தது. அதை வைத்து அவரை தேடிக் கொண்டு போகிறார்கள். அந்த எழுத்தாளர் பெரிய மேதையாகவும் உயர்ந்த நிலையில் இருப்பார் என்று நினைத்துப் போனார்கள்.

ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு சின்ன வீடு. அதற்குப் பின்னாடி உள்ள ஒரு ஸ்டோர் ரூம் தான் அந்த புத்தகத்தில் இருந்த விலாசம். வீட்டுக்காரரிடம் அந்த எழுத்தாளரைப் பற்றி விசாரித்தார்கள். அவர் ஏதோ வெறுப்பாக பதில் சொன்னாராம். அங்கே இருந்த அவருடைய சொந்தக்கார பெண் ஒருவர் தான் அந்த எழுத்தாளரை பற்றிய விடயங்களைச் சொன்னாராம்.

அந்த சிறிய ரூமில் பசியும் பட்டினியுமாக கிடந்த டாலிஸோட நிலைமை. அவருடைய பழக்கவழக்கம் ஐரோப்பாவிலே மேடை நடிகையாக இருந்த காதலி. அவளுடன் வாழுவதற்காக பணம் சம்பாதிப்பதற்கு டாலிஸ் அமெரிக்கா வந்ததன் முயற்சியெல்லாம் வீணாகப் போனது. கடைசியிலே அந்த எழுத்தாளர் எங்கேயோ காணாமல் போனது.

எல்லா விபரத்தையும் அந்தப் பெண் விபரமாக சொல்லியிருக்கிறார். அதைக் கேட்டதும் இந்த சினிமா ஆட்களுக்கு மனது ஏதோ மாதிரி ஆகிவிட்டது. எங்கே போயிருப்பார் அந்த எழுத்தாளர்? சரி அதை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்து அவர் எழுதிய திரைக்கதையை படிக்கிறார்கள்.

படிக்க படிக்க அது கண்முன்னே படம் போல் தெரிகின்றது. நீங்களும் கண்ணை மூடிக் கொண்டு அந்தக் காட்சியைப் பாருங்கள். குரங்குகள் கூத்தாடிக் கொண்டிருக்கின்றது. யுத்த நினைவுகளை அது ஏற்படுத்தியது. நடுவிலே ஐஸ்டீன் பரிதாபமாக தவித்துக் கொண்டு நிற்கிறார். குரங்குகள் எல்லாம் சேர்ந்து கொண்டு அவரை ஒரே அமுக்காக அமுக்கி விட்டது. எங்கும் இருட்டு. அமைதி!

3 ஆவது மகா யுத்தம் முடிந்து நிலவுகின்ற அமைதி அது. உலகம் முழுவதும் வெறுமை. மனிதர்களே கிடையாது. ஒரே ஒரு சின்னத் தீவு மட்டும் அப்படியே இருக்கிறது. ஒரு தாவர சாஸ்திரி ஒரு பெண் இன்னும் இரண்டு பேர் ஒரு படகிலே அங்கேயிருந்து புறப்பட்டு வருகிறார்கள். புதிய உலகம் அவர்களை வரவேற்கிறது.

அந்த தாவர சாஸ்திரியுடைய கார் பயங்கர மனிதர்களுடைய எல்லையைத் தாண்டிப் போகின்ற போது வீதி ஓரத்திலே ஒரு சமாதியைப் பார்க்கிறார்கள். அது யார் என்று அருகில் சென்று பார்த்தால் அது தான் அந்தத் திரைக்கதையை எழுதிய எழுத்தாளர் டாலிஸ்ஸோட சமாதி.

அவர்கள் அந்த சமாதி மேலே இரண்டு முட்டைகளை உடைத்து அஞ்சலி செலுத்தி விட்டு மேலே போறார்கள். திரை விழுது. அந்தப் புத்தகமும் இதோடு முடிந்து விடுகிறது. அது தான் நான் உங்களுக்கு சொல்ல வேண்டும் என்று நினைத்த விடயம்.

இந்தக் காலத்தில் நடப்பதை நினைத்துப் பார்த்தால் எதிர்காலத்திலே அந்தக் கதை உண்மையானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அடுத்த உயிர் அவஸ்தைப்படுவதை இப்பொழுது மனிதன் இரசிக்க ஆரம்பித்து விடுகிறான்.

ஒரு பஸ் விபத்து. அதிலே ஒருவன் கை போய் விட்டது. கையை இழந்தவன் வலி தாங்காமல் துடித்துக் கொண்டிருக்கிறான். அடுத்தவன் அவனுக்கு ஆறுதல் சொல்கிறார். எப்படித் தெரியுமா?

"ஏன்டா இப்படி துள்ளுகிறாய்?" அங்கே பார் தலையே போனவன் எல்லாம் அசையாமல் கிடக்கிறான். நீ கேவலமா கை போனதற்காக இப்படித் துடிக்கிறாயே? என்றானாம். அந்த அளவிற்கு ஆகி விட்டது மனிதாபிமானம்.

# யாழ்ப்பாண கலாசார மையத்தின் கட்டுமானப் பணிகள் இறுதிக்கட்டத்தில்

## வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தகவல்



(யாழ்ப்பாணம்)

தேசியகொள்கைகள், பொருளாதாரவிவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலும் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் யாழ்ப்பாணத்தில் ஒரு சின்னமாக கலாசார மையத்தை உருவாக்க இந்திய அரசு போதிய ஆதரவை வழங்கியுள்ளதுடன் (யாழ்ப்பாண நூல் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள-புல்லுக்குளம்) 1,800 மில்லியன் ரூபா செலவில் 12 மாடிகளைக் கொண்ட கவர்ச்சிகரமான கோபுரம், மண்டபம், அருங்காட்சியகம், கலைக்காட்சிக் கூடம் மற்றும் மிதக்கும் அரங்கம் போன்றன இதில் உள்ளடங்குகின்றன. இது வடக்கு மாகாணத்தில் மிகப் பெரிய கலாசார மையமாகும். இக் கருத்திட்டமானது இந்திய அரசின் மானியஉதவியின் கீழ் குறிப்பாக இந்தியப்பிரதமர் நரேந்திரமோடியின் விசேட உதவியுடன் இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு இணங்க அமைக்கப்படுகின்றது.

இக் கலாசார மையத்தின் நோக்கமாக, வடக்கு மாகாண மக்களின் கலாசாரத்தை பேணவும் மற்றும் நாட்டின் பிறபகுதிகளுடன் மீண்டும் இணைவதற்கும் யாழ்ப்பாணத்தின் பண்டைய கலாசார விழுமியங்கள் மற்றும் பாரம்பரியத்தை புத்துயிர் பெறச் செய்வதற்கும் வளர்ப்பதற்கும் சமூக உட்கட்டமைப்பை வழங்குவதாக அமையும் என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். இக் கலாசார மையமானது யாழ்ப்பாண மக்களுக்கு பல்வேறு வகையான உள்ளூர் மற்றும் சர்வதேச கலாசார நிகழ்வுகளை கண்டுகளிக்க உதவியாக அமைகின்றது.

இக்கலாசார மையமானது 600 பேரை உள்ளடக்கக் கூடியதான வசதிகளுடன் கூடிய திரையரங்கப் பாங்கிலான திட்ட ஏற்பாட்டுடனான மண்டபம், இணையத்தள ஆராய்ச்சி வசதிகளுடன் கூடிய பல் நோக்கு (Multimedia) அமைப்பிலான நூலகம், கண்காட்சி மற்றும் கலைக்காட்சி வெளியிடம், அருங்காட்சியகம், நிறுவன அலகுகள், சங்கீத மற்றும் அதனுடன் இணைந்த இசைக் கருவிகள், நடனங்கள், மொழிகள் உள்ளிட்ட வகுப்புக்களை நடத்துவதற்கான வசதிகளும் உள்ளன. இம்மையமானது பல்வேறு வகையான கலாசார ஒழுக்க பயிற்சிகள், அறிவுறுத்தல் மற்றும் கல்வி போன்றவற்றுக்கான விநியோக மையமாகவும் விளங்கவுள்ளது.

தேசியகொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு இந்திய அரசாங்கத்துடனும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மேம்பாட்டு மூலோபாய வழிகாட்டலில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இக் கட்டுமானப் பணிகளானது 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதமளவில் நிறைவடையும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

இக் கலாசார மையமானது யாழ்.மாவட்டத்தில் ஒரு கலாசார சின்னமான கட்டடமாகவும் பல்வேறு சமூகங்களிடையே சகவாழ்வும் ஒத்துழைப்பும் வழங்கும் மையமாக வெளிப்படுவதுடன் பிறப்புரிமையால் பேணப்பட்டு வந்த யாழ்ப்பாணத்தின் பண்டைய கலாசார பாரம்பரியத்தை ஊக்குவித்து மற்றும் புத்துயிர் அளித்து அதை வளர்க்கும் எனவும் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார். (இ-7)

# சர்வதேசம் ஏற்றுக்கொண்ட தலைவரைக் கொண்டு உறுதியான அரசாங்கத்தை அமைப்பது அவசியம்

## மகிந்த அணி கூறுகிறது

(இரத்தினபுரி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் சர்வதேசம் ஏற்றுக்கொண்ட பலமிக்க தலைவரை கொண்டு உறுதியான அரசாங்கத்தை அமைக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களை பொது ஜன பெரமுனவுடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா மேலும் தெரிவித்தார். (இ-7)

# கந்தபுராண எழுச்சி விழா ஏழாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா 2019" நிகழ்வின் ஏழாம் நாள் வைபவம் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் இந்துக்குருமார் அமைப்பின் செயலாளர், பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகர சர்மா ஆகியோா திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரனின் தலைமையில், யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி, கலாநிதி பா. தனபாலன், பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர், கலாநிதி திருமதி சுகன்ஜா அரவிந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறும்.

உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மயிலணி முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை மற்றும் சொக்கவளவு சோதிவிநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூன்றாம் அணி, ஆன்மீகப் பிரசாரகர், க.பிரகானின் "யாரிது தீர்க்கற்பாலர்?" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். சிறப்புச் சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோர்க்குப் பரிசில்களும் வழங்கப்படும்.


உற்சவ கால ஏழாம் நாள் நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாகச் தரங்கினி பாலமுருகன் மற்றும் பாலமுருகன் தரன்ஜன் ஆகியோரது இசைக்கச்சேரியும் இடம்பெறும். (இ-7)

# பஜனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் ஏழாம் நாள் உற்சவ தினத்தை முன்னிட்டு, இன்று கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த திருமதி. கமலராணி பாஸ்கர நாதசர்மாவின் மாணவர்களின் பஜனை இடம்பெறும். (இ-7)

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று ஏழாம் திருவிழா



## உரிமை தா சண்முகா

நட்டுவம் கொட்ட நல்மத்தளம்
தாளமிட நல்லை நகர்வாழும்
சட்டநாதன் மகனே நல்லையா
சட்ட திட்டங்கள் கடந்த சண்முகா
நாட்டமுடன் வந்தெம் குறைதீர் கொடியோடு
இட்டமுடன் எமதுரிமைதா
வாராதார் வந்துற்றார் சேராதார் சேர்வர்
வறுமை மனங்கள் மாழ மனம்வை!

*மண்டைத்தீவு மகிழ்நன்.*
*கையன்னா பேரின்பநாயகம்.*

## பவனி வருகிறான்

பவனி வருகிறான் - முருகன்
பவனி வருகிறான்
அவனியிலே அடியார் களிக்க
பவனி வருகிறான் - நல்லூரில்

நல்லை நகர் வீதியிலே
நாடி வரும் பக்தருக்கு
நல்ல ருளைத் தந்திடவே
நல்ல திருக் கோலத்துடன்

மங்களவாத் தியமொலிக்க
சங்கங்கள் முழங்கிவர
அடியார்கள் ஆர்ப்பரித்து
அரோகரா என ஒலிக்க
பவனி வருகிறான் - முருகன்
பவனி வருகிறான்

*சி.சிவானந்தராஜா*
*பண்டத்தரிப்பு*

## நல்லையம் பதி வேல் முருகா சரணம்

காவடிகள் உன்னருளை உலகிற்கு எடுத்தியம்ப
கருணைக் கடலே கந்தனே எழுகவே
பன்னிரு கரத்தானே பாவங்களை போக்குபவனே
பக்தர்களுக்கு காட்சி தரவே வருகவே
மயில்வாகனே மனநிறை வாழ்வு தருபவனே
மண்வளம் பெறவே மயிலேறி வருகவே
சரவணபவனே சங்கடம் போக்கும் குமரனே
செங்கதிர் வேலே போற்றி போற்றி!!!

*பி.ஜசந்தினி*
*அரியாலை*

## சந்தக் கவியில் நல்லைக் குமரன்!

ஐயா! வுனை யடி போற்றிடும்
அடியா ரிடர் பொடியாய்
வெய்யோன் வடி வாகே யடி
விளைக்கும் வடி வேலே
மெய்யே விதிர் விதிர்த்தே யெதிர்
மெய்யாய்த் தொழு நைவோர்
நொய் யாமலே உய்வாக் கிடும்
நல்லைக் கும ரோனே!

*கலாபூஷணம், சந்தக்கவிஞர்*
*நவ. பாலகோபால்*

# அரச காணியை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமான கேள்வி பதில்கள்

07

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**கேள்வி-23:-** குத்தகை முறியை /உறுதியை வைத்து கடன் அல்லது ஈடு ஒன்றினை எப்படிப் பெறுவது?

**பதில்:-**

- உங்களது வேண்டுகோளினை பிரதேச செயலாளருக்கு முன்வைக்க வேண்டும். அவர் கிராம அலுவலகரிடமிருந்து அறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொள்வார்.
- அவ்வேண்டுகோள் உடன் குத்தகை முறி / உறுதி, அது பதிவு செய்யப்பட்டுள்ள காணிப்பதிவாளர் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொண்ட காணி விபரங்களின் பிரதியினை சமர்ப்பிக்க வேண்டும்.
- கடன் அல்லது அடகுபிடிக்க அல்லது அடகு வைக்க எதிர்பார்க்கும் தாபனத்தின் கடிதம் ஒன்றுடன் அத்தாபனம் தயாரித்த உடன்படிக்கை உறுதியின் நகல் பிரதியின் பிரதி ஒன்று பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- பிரதேச செயலாளர் உங்களுக்கு அங்கீகரித்த கடன் உடன்படிக்கை கடன் உறுதியின் நகல் பிரதியுடன் அங்கீகாரக் கடிதத்தினை வழங்குவார்.
- அக் கடிதத்தினையும், அங்கீகரித்த கடன் உடன்படிக்கையின் உறுதி ஒன்றினையும் கடன் வழங்கும் தாபனத்திற்கு முன்வைக்க வேண்டும்.

**கேள்வி-24:-** அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொதுப் புனிதத்தலத்திற்காக அரச காணியொன்றை நீண்டகாலக் குத்தகைக்கு கொடுப்பதற்கான நடபடிகள் எவை?

> **பொதுப் புனிதத்தலத்திற்காக அரச காணியை குத்தகைக்கு வழங்குவதற்கான அறிக்கை பிரதேசச் செயலாளரால் தயாரிக்கப்படும் போது பல விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். அவற்றில் ஒன்று அரச காணியைக் குத்தகைக்கு வழங்குவதால் எவ்விதத்திலாவது ஒரு சமயக் குழப்பத்திற்கு வழி வகுக்கப்படுமா என்பதாகும்.**

**பதில்:-** பொதுப் புனிதத்தலத்திற்காக அரச காணியை குத்தகைக்கு வழங்குவதற்கான அறிக்கை பிரதேசச் செயலாளரால் தயாரிக்கப்படும் போது பின்வரும் தகவல்கள் அவ் அறிக்கையில் கொடுக்கப்பட வேண்டுமென அரச காணி தொடர்பான நடவடிக்கைக் கோவையில் கூறப்பட்டுள்ளது. விண்ணப்பம் செய்யும் நிறுவனத்தின் பெயர், முகவரி, காணி எக்காரணத்திற்காகத் தேவை என்பது, கோரப்படும் காணியின் விபரம், காணி அளக்கப்பட்டிருப்பின் வரைபட இலக்கமும் காணித்துண்டின் இலக்கமும்.

காணி அளக்கப்பட்டு இருக்காவிடின் காணியின் எல்லைகள், காணி அமைந்திருப்பது குடியேற்றத் திட்டத்திலா, அக் காணி அரச காணியா, அரசுக்கு சுவீகரிக்கப்பட்ட காணியா, காணியில் என்ன உண்டு என்பது பற்றியதும், யாரால் ஆட்சி செய்யப்படுகின்றதென்பது பற்றியதுமான விபரம், காணி தேவைப்படுவது புதிய புனிதத் தல அமைப்புக்காகவா, இல்லையெனில் தற்பொழுதுள்ள புனிதத் தலத்தை விஸ்தரிக்கவா, இல்லையெனில், அனுமதியின்றி தற்பொழுது புனிதத் தலத்திற்காக பிடித்துக் கொண்டிருப்பதை முறைப்படுத்துவதற்காகவா (சீர்படுத்தல்), காணி தேவைப்படுவது தற்பொழுது இயங்கிவரும் புனிதத்தலம் ஒன்றை விசாலப்படுத்துவதற்காகவெனில் அப் புனிதத்தலம் அமைந்திருப்பது எங்கே, அதன் பரப்பளவு யாது, இப் புனிதத்தலம் அரச காணியிலிருக்கிறதா, இன்றேல் தனியார் காணியொன்றிலா, அது அமைந்திருப்பது அரச காணியெனில் அப் புனிதத்தலம் தொடர்பான காணி ஆணையாளர் நாயகத்தின் தொடர்பிலக்கம் இருப்பின் அதைக் குறிப்பிடவேண்டும். காணி அனுமதியின்றி பிடித்துக் கொள்ளப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரத்தைக் குறிப்பிடவேண்டும். காணி ஆணையாளருடன் கடிதப் பரிமாறல் நடந்திருப்பின் அவரது தொடர்பிலக்கம் காட்டப்படல் வேண்டும்.


கோரப்பட்டுள்ள காணி ஏதேனும் காரணத்திற்காக ஒதுக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டு அல்லது ஏதேனும் தேவைக்குப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா, ஆமெனில் இக் குத்தகை அந் நோக்கத்தைப் பாதிக்குமா, அரசாங்கத் தேவைகளுக்கு வேறு காணிகள் போதியளவு உண்டா, காணியில் விலையுயர்ந்த மரங்கள் உண்டா, ஆமெனில் அவற்றை பயன்படுத்தல் சம்பந்தமாக முன் வைக்கப்படும் ஆலோசனைகள் யாவை, காணிக்குச் செல்லும் வழி உண்டா, அருகிலிருக்கும் விகாரைக்கு, கோயிலுக்கு, கிறிஸ்தவ தேவாலயத்திற்கு, முஸ்லிம் பள்ளிவாசலுக்கு உள்ள தூரம் யாது, உத்தேசிக்கப்படும் வணக்கத்தலத்தினால் எத்தனை பேர் பயன் பெறுவர், காணியைக் குத்தகைக்கு வழங்குவதால் எவ்விதத்திலாவது ஒரு சமயக் குழப்பத்திற்கு வழி வகுக்கப்படுமா, காணியில் நிர்மாணிக்கக் கருதப்படும் கட்டடங்கள் யாவை, அவை கட்டிமுடிக்கப்படுவது எவ்வளவு காலத்தில், விண்ணப்பதாரருக்கு அக் கட்டடங்களை கட்டி முடிக்க போதுமான பணவசதியுண்டா, இக் குத்தகையை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது யாருக்கு, சங்கத்திற்கெனில் அச் சங்கத்தின் பெயர் யாது, அது பதிவு செய்யப்பட்டுள்ளதா, இல்லையெனில் அது ஸ்தாபிக்கப்பட்டுள்ளதா, அச் சங்கம் பதிவு செய்யப்படாது அல்லது தாபிக்கப்படாது இருப்பின் தெரிவு செய்யப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர் மூலம் இக் காணியை ஆட்சிசெய்ய அனுமதியளிக்கும் ஏற்பாடுகள் இச் சங்க அமைப்பு விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளதா, காணியில் தொல் பொருட் பெறுமதியுண்டா, ஆமெனில் அது சம்பந்தமாக தொல்பொருள் ஆணையாளரின் கருத்து யாது, நம்பிக்கைப் பொறுப்பாளர் இருப்பின் அவர்கள் யாவர், கோரப்பட்டிருக்கும் காணியை வழங்க முடியாதெனில் அதற்குப் பதிலாக வழங்கப்படக் கூடிய வேறேதேனும் காணி உண்டா, இத் தகவல்களுடன் பிரதேச செயலாளரின் தனிப்பட்ட விதப்புரையும் சேர்த்து அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும்.

**கேள்வி-25:-** அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலக் குத்தகைக்கு அரச காணி ஒன்றைப் பெறுவதற்கு விண்ணப்பம் சமர்ப்பித்து குத்தகை முறி விண்ணப்பதாரிக்கு கிடைக்கும் வரை அவ் விண்ணப்பம் எவ்வாறு செயல் முறைப்படுத்தப்படுகிறது?

**பதில்:-**

1. விண்ணப்பதாரி விண்ணப்பத்தை அக்காணி இருக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிப்பார்.
2. பிரதேச செயலாளர் தன் விதப்புரையுடன் மாகாண காணி ஆணையாளருக்குச் சமர்ப்பிப்பார்.
3. மாகாண காணி ஆணையாளர் தன் விதப்புரையுடன் காணி ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிப்பார்.
4. காணி ஆணையாளர் நாயகம் தன் விதப்புரையுடன் காணி அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிப்பார்.
5. காணி அமைச்சின் செயலாளர் தன் ஒப்புதலுடன் **(approval)** காணி ஆணையாளர் நாயகத்திற்கு திருப்பி அனுப்புவார்.
6. காணி ஆணையாளர் நாயகம் தன் ஒப்புதலுடன் **(approval)** மாகாண காணி ஆணையாளர் ஊடாக பிரதேச செயலாளருக்கு அனுப்புவார்.

### அரச காணிகளை நீண்ட காலக்குத்தகை வழங்கும் படிமுறை கேள்வி-பதில் 25 ஐப் பார்க்கவும்




7. பிரதேசச் செயலாளர் காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்து தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் **(Valuation department)** கோருவார்
8. அதே நேரத்தில் காணியை அளந்து நில அளவைப்படம் தயாரித்து தருமாறு நில அளவைத் திணைக்களத்திடம் பிரதேசச் செயலாளர் வேண்டுகோள் ஒன்றை அனுப்புவார்.
9. பிரதேசச் செயலாளர் விண்ணப்பதாரியிடம் குத்தகைப் பணம் உட்பட்ட எல்லா அறவீடுகளையும் செய்தபின், காணி குத்தகைக்கு விண்ணப்பதாரியிடம் கையளிக்கப்படும்.
10. காணி ஆணையாளர் நாயகம், நில அளவைத் திணைக்களத்திடமிருந்து நிலஅளவைப்படம் கிடைத்தவுடன் காணிக்கான குத்தகை முறியைத் தயாரிப்பார்.
11. காணி ஆணையாளர் நாயகம் தயாரித்த குத்தகை முறியில் ஜனாதிபதி கையெழுத்து இடுவதற்காக அக் குத்தகை முறி காணி அமைச்சின் செயலாளர் ஊடாக ஜனாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பப்படும்.
12. ஜனாதிபதி கையெழுத்து இட்டபின் குத்தகை முறி காலனி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும்.
13. காணி ஆணையாளர் நாயகம் அக் குத்தகை முறியை பிரதேச செயலாளருக்கு அனுப்புவார்.
14. பிரதேச செயலாளர் அக்குத்தகை முறியை காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வார்.
15. காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்த பின் அக்குத்தகை முறி பிரதேசச் செயலாளரால் விண்ணப்பதாரியிடம் வழங்கப்படும்.

(தொடரும்...)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கொள்ளை; தடுக்க முற்பட்ட ஊழியர் சுட்டுக்கொலை!

(குருநாகல்)

குருநாகல் மாவட்டத்தின் பொல்கஹவெல பிரதேசத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவமொன்றில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொல்கஹவெல பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் கடமையில் இருந்த ஊழியரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

பொல்கஹவெல பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் கொள்ளையிடுவதற்காக இரு இனந்தெரியாத நபர்கள் மோட்டார் சைக்கிளில் சென்று பணத்தைக் கொள்ளையடித்தபோது எரிபொருள் நிலைய ஊழியர் அதனைத் தடுக்க முற்பட்டார்.

இந்நிலையில் குறித்த கொள்ளையர்கள் ஊழியரை சுட்டுக் கொன்றுவிட்டு பணத்தை கொள்ளையடித்து தப்பிச்சென்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாகத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கம்பரெலிய திட்டத்தில் ஊழல்

## கணேஸ்வரன் வேலாயுதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் கம்பரெலிய திட்டத்தில் ஊழல் நிறைந்துள்ளதாக குற்றஞ்சாட்டியிருக்கும் மக்கள் முன்னேற்றக் கூட்டணியின் செயலாளர் நாயகம் கணேஸ்வரன் வேலாயுதம் இது சம்பந்தமாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.




யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கம்பரெலிய திட்டத்தினூடாக பல திட்டங்கள் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் பல முறைகேடுகள் நடக்கின்றன. அதிலும் பல திட்டங்களிலும் ஊழல் மிக மோசமாக தலைவிரித்தாடுகின்றது. குறிப்பாக கம்பரெலிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளும் ஊழல்களில் ஈடுபடுவதாக பலரும் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர். ஆயினும் இவ் ஊழல் நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் உரியநடவடிக்கைகள் எடுக்கவில்லை. அதேபோல இரணைமடு விவகாரம் தொடர்பிலான அறிக்கையை ஆளுநர் வெளியிடாமல் இருக்கின்றார். ஆகவே அந்த அறிக்கையை இனியும் தாமதப்படுத்தாமல் வெளியிட்டு உரியநடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆகவே வடக்கில் இடம்பெறறதும் இடம்பெற்று வருகின்றதுமான ஊழல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி அந்த ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக அவசியமானது.

இது குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9)

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி யாருக்கு ஆதரவு என்று வெகுவிரைவில் அறிவிக்கும்

## அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு

(பூண்டுலோயா)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் முற்போக்குக் கூட்டணி யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் வெகுவிரைவில்அறிவிக்கும் என மலைநாட்டு புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.



பூண்டுலோயா சீன் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 35 தனி வீட்டுத்திட்டத்தைக் கொண்ட ஓ.ஏ.இராமையா புரத்தைத் திறந்து வைத்து மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலை பத்திரிகை ஒன்றில் செய்தி ஒன்றை வாசித்தேன். அதில் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முறையாக வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்ளுமாறு ஒரு அறிக்கை விட்டிருந்தார்.

அவருக்கு நான் ஒன்றைக் கூறிகொள்ள ஆசைப்படுகின்றேன். நான் அமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர் தோட்ட நிறுவனங்களோடு கலந்துரையாடி காணியைப் பெற்றுத் தேசிய கட்டட ஆய்வு திணைக்களத்தின் ஊடாக அறிக்கையைப் பெற்று அரசாங்கத்தின் அனுமதியோடு இந்தத் தனி வீட்டுத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறேன்.

நாங்கள் இந்த வீடமைப்புத் திட்டத்தை முறையில்லாமல் அமைக்கவில்லை. இவர்கள் அனைவருக்கும் நான் வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்வது பொருத்துக் கொள்ள முடியவில்லை.

இதுவரை காலமும் மலையகத்தில் இருந்த அமைச்சர்கள் தலைவர்கள் மலையகத்தை பற்றிப் பேசிக்கொண்டு இருந்தார்களே தவிர இதுபோன்ற கிராமங்களை அமைத்துக் கொடுக்கவில்லை. நான் அமைச்சராக வந்த பிறகு தான் ஏழு பேர்ச் காணியில் பத்து இலட்சம் ரூபா செலவில் இந்தத் தனி வீட்டுத் திட்டத்தை மேற்கொண்டு வருகிறேன். இதனைப் பொருத்துக் கொள்ள முடியாத சிலர் விமர்சனம் செய்து வருகிறார்கள். யார் என்னை எந்தவகையில் விமர்சித்தாலும் நான் மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு தான் இருப்பேன்.

அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து கொண்டு நான் வீடமைப்புத் திட்டத்தை மேற்கொண்டால் சிலர் கூறுகிறார்கள் இந்த வீடமைப்புத் திட்டத்தை அமைச்சர் திகாம்பரம் மேற்கொள்ளவில்லை. இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் தான் மேற்கொண்டு வருவதாக கூறுகிறார்கள்.ஆனால் அமைக்கப்படும் வீடமைப்புத் திட்டத்தில் ஒரு கூரைத் தகடு காற்றுக்கு அள்ளுண்டு சென்றால் அது திகாம்பரம் கட்டிக் கொடுத்த வீடு என விமர்சனம் செய்கிறார்கள்.

மக்களுக்குத் தெரியும் திகாம்பரம் வந்த பிறகு மலையகத்தில் எவ்வாறு மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று. மாற்றத்தை கொண்டு வர முடியாதவர்கள் தான் இன்று விமர்சனம் செய்து வருகிறார்கள்.

அதேபோல் 50 ரூபா கொடுப்பனவை கட்டாயம் பெற்றுத் தருவோம். ஆனால் 20 ரூபாவைப் பெற்றுக் கொடுத்தவர்கள் கூறுகிறார்கள் நான் மக்களை ஏமாற்றுவதாக. நான் ஒரு போதும் மலையக மக்களை ஏமாற்றமாட்டேன். நான் சொல்வதைச் செய்பவன். 80 வருடம் மலையகத்தை ஆண்டவர்கள் இன்று தான் 30 அம்சக் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். அவர்கள் முன்வைத்த 30 கோரிக்கைகளில் அரைவாசி பகுதி நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை மீனவர்கள் சீஷெல்ஸில் கைது

(சீஷெல்ஸ்)

இலங்கை மீனவர்கள் ஏழு பேர் சீஷெல்ஸில் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேருவளையிலிருந்து மீன்பிடித் தொழிலுக்காகச் சென்ற ஏழு மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சீஷெல்ஸ் நாட்டுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக இலங்கை மீன்பிடித் திணைக்களம் தகவல் வெளியிட்டது.

இந்த மீனவர்களை விடுவிப்பது தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 70 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 200 | 300 |
| தக்காளி | 100 | 120 | 110 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 110 | 120 |
| கோவா | 80 | 80 | 60 | 80 |
| கரட் | 100 | 140 | 120 | 160 |
| பூசணி | 80 | 50 | 50 | 60 |
| புடோல் | 50 | 60 | 60 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 130 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 160 | 150 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 60 | 100 |
| பயற்றங்காய் | 100 | 70 | 70 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 70 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 160 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 90 | 120 |
| போஞ்சி | 120 | 160 | 90 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 50 | 100 |
| கீரை-1பிடி | 30 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 250 | 160 | 150 | 240 |
| வெங்காயப்பூ | 250 | 180 | 100 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 50 | 120 | 40 |

# 2 மில்லியன் ரூபா செலவில் வீதி புனரமைப்பு






(யாழ்ப்பாணம்)

அராலி ஓடைக்காடு 2 ஆம் வீதிப் புனரமைப்புப் பணிகள் கடந்த புதன்கிழமை முடிவடைந்தன. இதற்கென 2 மில்லியன் ரூபாய் நிதி வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் க.இலங்கேஸ்வரனால் பிரதேச சபை ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டது. (இ-104)

# புனித ஹஜ் பெருநாளைக் கொண்டாடுவோம்



புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதி படைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதி படைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாக புனித ஹஜ் கடமையை நிறைவேற்றியாக வேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றாமலிருப்பது பெருங்குற்றமாகும்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும்போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம்மனக் கண் முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம் வருதல், ஹஜருல் அஸ்வத்கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம்நிரம்பிய ஸம் ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ரா ஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கிறது.

ஹஜ் ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேச அளவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்று கூடலில் மேலும் வலுப் பெறுகிறது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள் கூட இவ்வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இணைவைப்போடு மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்து வந்தது. இது ஒரு வழிபாடு என்பதை விடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்றுகூடும் வியாபார சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப்பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு இணை வைப்பும் மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்று கூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப் பெற்றது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு, எத்தனையோ காலங்களாக "இல்லையே தமக்கொரு பிள்ளை" என ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான, ஒப்பற்ற மனதையும், ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும்மன சந்தோஷத்துடனும் உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்படவேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபா ன்மையினராகிய நாம் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புரிந்துணர்வுடன் உழ்ஹிய்யா கொடுப்போம் புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்.

**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (ஜே.பி)**
**யாழ்ப்பாணம்**

# ஐ.தே.கவை பிரிக்க சம்பிக்க முயற்சிக்கவில்லை

## மரிக்கார் ஆதரவு



(கொழும்பு)

அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரிக்க ஒருபோதும் முயற்சிக்கவில்லை என கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பி. மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க ஒரு திறமையான அரசியல்வாதி. அவர் புத்தாக்க சிந்தனையுள்ள ஒருவர். அவர் ஒருபோதும் ஐ.தே.கட்சியைப் பிரிக்க முயற்சிக்கவில்லை. அவ்வாறு கூறப்படுவது பொய்யாகும் எனவும் மரிக்கார் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

அரசாங்கக் கூட்டணிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய இலங்கையிலுள்ள முன்னணி சிங்கள பௌத்த கடும்போக்கு கட்சிகளுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1799

### குமுதினி



கண்ணீர்
நம்
அனுமதியின்றி
நம்
விழியில்
தோன்றிடும்
அழையா
விருந்தாளி

### ராம்சரண்

பொன்னு ரொம்ப பொறுமைசாலின்னு சொல்லி ஏமாத்திட்டாங்க... அப்படி என்ன செஞ்சா?காலைல பொறுமையா 10 மணிக்கு எழுந்திருக்கிறாயா



### முத்துராசா

தமிழிலேயே எனக்குப் பிடிக்காத பாட்டுன்னா அது... சொட்ட சொட்ட நனையுது தாஜ்மஹால் என்கிற பாட்டுத்தான்




### தேவசகாயம்

செல்போன் படுத்தும்பாடு



### ஜெயா

தாய் பாசத்திற்கு இணையான அன்பு வேறு எதுவும் இல்லை




### கண்ணன்

எவன்டா சொன்னது பேரிச்சம்பழத்தில இரும்புச்சத்து இருக்குன்னு... நானும் காந்தத்தை வைத்து அரை மணி நேரமா ஒட்டவைச்சுப் பார்க்கிறன் ஒட்டவே மாட்டேங்குது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எரிபொருள் தாங்கி வெடித்து விபத்து 60 பேர் உடல் கருகி உயிரிழப்பு!

(பார்எஸ்சலாம்)

தன்சானியாவில் எரிபொருள் தாங்கி வெடித்ததில் 60 பேர் உயிரிழந்ததாகவும் 65 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

துறைமுக நகரமான டார் எஸ் சலாம் நகருக்கு மேற்கே 200 கி.மீ. தொலைவில் உள்ள மொரோகோரோ பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நிகழ்ந்துள்ளது.




வீதியில் கவிழ்ந்த வாகனத்திலிருந்து எரிபொருளை மீட்க மக்கள் முயற்சித்ததாகவும் இதன் போதே குறித்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வெடிப்பு சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களில் பலர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் எனவே பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ஜ)

# காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத் தலைவராக சோனியா காந்தி தெரிவு

(டில்லி)

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவராக சோனியா காந்தி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 52 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. 400 தொகுதிகளில் படுதோல்வியை தழுவியது. இதையடுத்து, மே மாதம் 25 ஆம் திகதி காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து ராகுல் காந்தி இராஜினாமா செய்தார்.

தனக்கு பதில் புதிய தலைவரைத் தேர்வு செய்து கொள்ளும்படி அறிவித்தார். ஆனால் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் இதை ஏற்கவில்லை.

அவரை சமரசம் செய்து வந்தனர். ஆனாலும் இராஜினாமாவை திரும்பப்பெற ராகுல் காந்தி திட்டவட்டமாக மறுத்துவிட்டார். பிரியங்காவை புதிய தலைவராக்க முயற்சி நடந்தபோதும் அதையும் ராகுல் தடுத்து நிறுத்தினார். இதனால் கடந்த 77 நாட்களாக காங்கிரஸ் கட்சிக்கு தலைவர் பதவி இல்லாமல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. 134 ஆண்டுகள் பாரம்பரிய சிறப்புக் கொண்ட காங்கிரஸ் கட்சி இதுவரை இத்தகைய பரிதாப சோதனையை சந்தித்தது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

## காஷ்மீர் விவகாரம்

# பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு வாய்ப்பு; போர்க்கப்பல்களை ஆயத்தப்படுத்திய இந்தியா



(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை காரணமாக பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டு இயங்கும் பயங்கரவாதிகளின் தாக்குதலை சந்திக்க நேரிடும் என்று இந்தியக் கடற்படையினர் போர்க் கப்பல்களை கிழக்கு மற்றும் மேற்குக் கடற்பரப்பில் எச்சரிக்கையுடன் நிறுத்தி வைத்துள்ளனர்.

அத்துடன் ஜம்மு காஷ்மீர் பகுதிக்கு அண்மித்த பகுதியில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்தும் அவதானத்துடன் உள்ளனர்.

அப் பகுதியின் நிலைமை அமைதியாக இருந்தபோதிலும், எந்தவொரு அசம்பாவித நடவடிக்கைகளும் இடம்பெறாமல் தடுப்பதற்கே இவ்வாறு பாதுகாப்புப் படையினர் கடமையில் உள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஜ)

# ஏமனில் போர் நிறுத்தத்திற்கு பிரிவினைவாதிகள் இணக்கம்

(சனா)

ஏமனில் பலநாட்களாக இடம்பெற்றுவரும் தொடர் தாக்குதல் சம்பவங்களை அடுத்து போர் நிறுத்தத்திற்கு தெற்கு பிரிவினைவாதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடைமுறைக்கு வந்த போர் நிறுத்தத்திற்கு பிரிவினைவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச ஆதரவுடைய அரசாங்கத்திற்கு ஆதரவான படைகளுடன் பல நாட்கள் இடம்பெற்ற மோதலின் பின்னர் ஏமன் பிரிவினைவாதிகள் துறைமுக நகரமான ஏடனை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் ஆதரவுடைய தெற்கு இடைக்கால சபையுடன் இணைந்த படைகள் ஒரு சுயாதீனமான இராஜ்ஜியத்தை கோரி போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.



அதன்படி இராணுவ முகாம்கள் மற்றும் ஜனாதிபதி மாளிகையினை தெற்கு பிரிவினைவாதிகள், அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது ஒரு "சதி" என ஏமன் அரசாங்கம் கூறியுள்ளது. இந்த நடவடிக்கை கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போராடிய சவுதி தலைமையிலான கூட்டணியை முறித்துக் கொண்டுள்ளது.

இருப்பினும் தற்போது குறித்த கூட்டணி உடனடியாக போர்நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்ததுடன், அதை மீறுபவருக்கு எதிராக இராணுவ சக்தியைப் பயன்படுத்தும் என எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்நிலையில் போர் நிறுத்தத்திற்கு பிரிவினைவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# சீனாவைத் தாக்கிய லெகிமா

## 13 பேர் உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவைத் தாக்கிய லெகிமா சூறாவளி காரணமாக இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை தாய்வான் மற்றும் சீனாவின் முக்கிய பல பகுதிகளை லெகிமா சூறாவளி தாக்கியது.

குறித்த சூறாவளிக்கு ஆரம்பத்தில் "சுப்பர் சூறாவளி" என்று பெயரிடப்பட்டது.

ஆனால் காற்று சற்று பலவீனமடைந்து மணிக்கு சுமார் 187 கிமீ (116 மைல்) வேகத்தில் வீசியது.

இந்த சூறாவளி காரணமாக இதுவரை 16 பேர் காணாமற் போயுள்ளதாக அம்மாநில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஜ)

# பிரேசிலில் துப்பாக்கிச்சூடு ஐந்து பேர் உயிரிழப்பு

தெற்கு பிரேசிலில் உள்ள மொஸ்டர்டாஸில் ஆயுதக் குழு ஒன்று களியாட்ட விடுதிக்குள் நுழைந்து ஊழியர்கள் மற்றும் அங்கு வந்த பொதுமக்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 5 பேர் கொல்லப்பட்டதாகவும் 4 பேர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். முகத்தை முழுமையாக மூடிக்கொண்டு குறித்த இடத்திற்கு வந்த ஆயுதக்குழு, அவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு அவர்களின் தொலைபேசிகள் மற்றும் பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

மேலும் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள போர்டோ அலெக்ரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை வடக்கு பிரேசிலிய நகரமான பெலெமில் மே மாதம் இடம்பெற்ற ஆயுதக்குழுவின் தாக்குதலில் 11 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# நீடிக்கும் பதற்றங்களுக்கு மத்தியிலும் தேர்தலுக்கு தயாராகும் எதியோப்பியா

(அடிஸ் அபாபா)

2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை நடத்தப்போவதாக எதியோப்பியாவின் ஆளும் கூட்டணியான மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி அறிவித்துள்ளது.

ஆபிரிக்காவின் ஹோர்ன் நாட்டில் பாதுகாப்புக் கெடுபிடிகள் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக தேர்தலை ஒத்திவைக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த அறிவிப்பு வெளியாகியது.

செயற்குழுத் தேர்தல் வாக்கெடுப்பு நடைபெறும் திகதி தொடர்பாக அறிவிக்கவில்லை. இருப்பினும் அடுத்த ஆண்டு தேர்தலை நடத்த நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது என அக்குழுவின் உறுப்பினர் கெடசெவ் ரெடா தெரிவித்தார்.

வடக்கு அம்ஹாரா பிராந்தியத்தில் போராளிகளால் ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட ஒரு சதி முயற்சி மற்றும் அதன் பின்னர் நாடு முழுவதும் ஏற்பட்ட இன வன்முறை காரணமாக தேர்தல் நடைபெறுமா என்று சில கேள்விகள் எழும்பின.

2.4 மில்லியன் எதியோப்பியர்களின் இடம்பெயர்வுக்கு காரணமாக இருந்த குறித்த இன வன்முறை ஏற்பட்ட போதிலும் தேர்தலை நடத்துவதில் தாமதிக்க எதிர்க்கட்சிகள் விருப்பம் தெரிவிக்கவில்லை.

ஆபிரிக்காவின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக விளங்கும் எதியோப்பியாவின் பிரதமர் அபி அஹமட் கடந்த ஆண்டு ஆட்சிக்கு வந்ததிலிருந்து தொடர்ச்சியாக அரசியலில் சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளார்.

குறிப்பாக பல அரசியல் கட்சிகளை தடைசெய்தல், அரசியல் கைதிகள் மற்றும் ஊடகவியலாளர்களை விடுவித்தல் மற்றும் நாடுகடத்தப்பட்ட கிளர்ச்சிக் குழுக்களை வரவேற்பது உட்பட பல இதில் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# சிரியாவில் போராளிகள் மோதல் 55 பேர் பரிதாபமாக உயிரிழப்பு



(பெய்ரூட்)

சிரியாவில் அரசுக்கு எதிராக செயற்பட்டு வரும் போராளிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 55 பேர் கொல்லப்பட்டனர் என அந்நாட்டு மனித உரிமை கண்காணிப்பு அமைப்பினர் தெரிவித்தனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராகப் பல்வேறு புரட்சிப் படையினர் ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிரியா தலைநகர் டமாஸ்கஸ் அருகேயுள்ள கிழக்கு கவுட்டா பகுதியில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்பது தொடர்பாக கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து அங்குள்ள இரு போராளி குழுக்களுக்கிடையே மோதல்களும் நடந்து வருகின்றன.

இதுதவிர, ஐ.எஸ். பயங்கரவாதிகளும் சில பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இந்த குழுக்களையும் வேட்டையாட அமெரிக்க விமானப் படையின் துணையுடன் அந்நாட்டு முப்படைகளும் தீவிரமாகப் போரிட்டு வருகின்றன

இந்நிலையில், சிரியாவின் வடமேற்குப்பகுதியிலுள்ள ஹாமா, அலெப்போ மற்றும் லடாகியா மாகாணங்களில் செயற்பட்டு வரும் போராளி குழுக்களுக்கு இடையே நேற்று மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் அரச சார்புப் படைவீரர்கள் மற்றும் போராளிகள் என 55 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சிரியாவில் உள்ள பிரிட்டனுக்கான மனித உரிமைகள் அமைப்புத் தெரிவித்துள்ளது. (ஐ)

# கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட துருக்கி மாலுமிகள் 10 பேர் விடுதலை



(அங்காரா)

மேற்கு ஆபிரிக்காவின் கடற்கரையில் கடந்த மாதம் கடத்தப்பட்ட துருக்கி மாலுமிகள் 10 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விடுவிக்கப்பட்டதை நேற்று முன்தினம் சனிக்கிழமை துருக்கிய ஊடகம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஜூலை 16 ஆம் திகதி நைஜீரியா கடற்கரையில் கடற் கொள்ளையர்களால் கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதன்பின்னர் குறித்த கப்பலை எடுத்துச் செல்ல கடற் கொள்ளையர்கள் 10 பேரைத் தேர்ந்தெடுத்ததுடன் மேலும் அவர்களுடன் 8 பேர் கப்பலில் சென்றிருந்தனர்.

இந்நிலையில், விடுவிக்கப்பட்ட 10 மாலுமிகள் சிறந்த உடல் நலத்துடன் இருப்பதாக துருக்கி ஊடகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# பள்ளிவாசலுக்குள் துப்பாக்கிச்சூடு ஒருவர் பொலிஸாரால் கைது




(ஒஸ்லோ)

நோர்வேயில் உள்ள பள்ளிவாசல் ஒன்றினுள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தலைநகர் ஒஸ்லோவின் புறநகரில் உள்ள அல்-நூர் இஸ்லாமியத் தொழுகை இடத்தின் மீது துப்பாக்கிதாரி ஒருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து, பெண்ணொருவர் சந்தேக நபரின் வீட்டில் இறந்து கிடந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் 20 வயது மதிக்கத்தக்க நோர்வே குடியுரிமையுடையவர் எனத் தெரிவித்த பொலிஸார், அந்த நபர் உறவினரைக் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)

# மியன்மாரில் நிலச்சரிவு பலி 35 ஆக அதிகரிப்பு

(யாங்கூன்)

மியன்மார் நாட்டில் பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிகை 35 ஆக உயர்ந்துள்ளது.

மியன்மார் நாட்டில் கடந்த சில நாட்களாக கனமழை கொட்டித்தீர்த்து வருகிறது. கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் கனமழை மற்றும் வெள்ளத்தால் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.



இதற்கிடையில், மியன்மாரில் இன்னும் ஓரிரு நாட்களுக்கு கனமழை நீடிக்கக் கூடும் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தல் விவகாரம்

# ரஷ்யாவில் எட்டு ஆண்டுகளில் முதன்முறையாக அரசிற்கு எதிராக பல்லாயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்





(மொஸ்கோ)

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இடம்பெறும் போராட்டத்தில் பத்து ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவது இதுவே கடந்த 8 ஆண்டுகளில் முதன்முறை எனத் தெரிவித்துள்ளது.


நியாயமான தேர்தலை நடத்தக்கோரி, ஒரு மாதத்தில் ஐந்தாவது ஆர்ப்பாட்டமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற போராட்டத்தில் 60,000 பேர் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி வேட்பாளர்கள் அடுத்த மாதம் இடம்பெறும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டங்களுக்கு அதிகாரபூர்வமாக அங்கீகாரம் வழங்கப்பட்டபோதும் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் அலுவலகங்களுக்கு வெளியே இடம்பெற்ற போராட்டத்தின்போது பலரும் கைது செய்யப்பட்டிருந்தனர். அந்தவகையில் கடந்த இரண்டு சனிக்கிழமைகளில் அங்கீகரிக்கப்படாத போராட்டங்களில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வயநாட்டில் நிலச்சரிவு 29 பேர் உயிரிழப்பு

## மீட்புப் பணிகள் தீவிரம்



(கேரளா)

வயநாடு, மலப்புரம் மாவட்டங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 29 பேர் உயிரிழந்த நிலையில் 10 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் நிலச்சரிவில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

கேரளாவில் வயநாடு, மலப்புரம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதால் வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. இந்த கோரச்சம்பவத்தில் சிக்கி நூற்றுக்கணக்கானோர் மாயமாகி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை கனமழை காரணமாக கேரளாவில் வயநாடு, மலப்புரம் உள்ளிட்ட 4 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஒரு நாள் நிச்சயம் விடியும்– அது
உன்னால் மட்டுமே முடியும்.

– அப்துல் கலாம்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உண்மையை இனங்காண்பதுதான் இளைஞர்களின் முதற்பணி

தமிழினத்தில் இருக்கக்கூடிய சில அரசியல் தரப்புகள் செய்கின்ற திருகுதாளங்களுக்கு அளவே இல்லை என்றாயிற்று.

யுத்தத்தின்போது மரணித்த பல்லாயிரக் கணக்கான எம் உறவுகளின் இழப்பில்; சிலர் அரசியல் நடத்துவதை எண்ணும்போது இப்படியும் ஈனப் பிறப்புகள் இருக்கின்றனவா என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு நியாயம், நேர்மை, அறம் என்பவற்றையெல்லாம் புறந்தள்ளி, எத்துணை தூரம் கேடு செய்ய முடியுமோ அந்தளவுக்குக் கேடு செய்யத் துணிந்து விட்ட ஒரு சமூகம் உருவாகிவிட்ட பின்பு, எதுவும் விமர்சனத்துக்கும் வில்லங்கத்துக்கும் உட்பட்டதாகவே இருக்கும்.

யாரும் எதுவும் செய்ய முடியாது. நன்மை செய்தாலும் அதனைத் தீமையாக வர்ணிக்கின்ற பயங்கரமான நிலைமை இருக்கும் அதே நேரம், கெடுதியை உச்சமான நன்மை என்று வாதிடுவதற்கும் தயாராகிவிட்டால், அதுவே அழிவிற்கான அறிகுறியாகும்.

இந்தத் துர்ப்பாக்கிய நிலை எங்கள் மண்ணில் விளைந்து விட்டது. இதனை வேரறுத்து நீதியை நீதி என்றும் அநீதியை அநீதி என்றும் எடுத்துரைக்கக்கூடியதான அறம் சார்ந்த மக்கள் சமூகத்தை தோற்றுவிக்க வேண்டும். அப்போதுதான் எம் மக்கள் இந்த மண்ணில் நிம்மதியாக வாழ முடியும்.

இந்த நிலைமையை ஏற்புடுத்தக்கூடிய மிக உன்னதமான பலம் எங்கள் இளைஞர்களிடமே உண்டு.

மண் மீட்புப் போரில் எத்தனையோ இளைஞர்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தனர்.

அவர்களின் தியாகம் வீண் போகக்கூடாது என்று ஒரு இளைஞன் நினைப்பானாயின் அவனின் முதற் பணி தமிழினத்துக்குத் துரோகம் செய்கின்ற – விசமத்தனம் புரிகின்ற – போக்கிரித்தனமான அரசியல் நடத்துகின்றவர்களை இனங்காண்பதுதான்.

இவ்வாறு நயவஞ்சகத்தனம் மிக்கவர்களை இனம் காணாத வரை; அயோத்தி மாநகரைப்போல் சிம்மாசனத்தில் பாதுகையும் அசோகவனத்தில் சீதையும் மனக்குழப்பத்தில் இராமனும் இருக்க, அயோத்தி மக்கள் துன்பத்தில் வாழ்ந்த சூழ்நிலைதான் நமக்கும் உரித்தாகும்.

ஆக, இங்கு நாம் கூறுவது தசரதன் வரம் கொடுத்ததையோ, கைகேயி இராமன் காடேக! என்று வரம் கேட்டதையோ, இராவணன் சீதையைக் கடத்திச் சென்றதையோ அல்ல.

மாறாக தசரதர் மாளிகையில் உடன் இருந்து அந்த மன்னர்க்கு அள்ளி வைத்த கூனி இருக்கிறாளே இவளே இத்துணை கெடுதிக்கும் கால்கோள் இட்டவள்.

ஆகையால் அன்புக்குரிய இளைஞர்களே! கூனிகளை இனங்காணுங்கள். இனங்கண்டு தக்கபாடம் புகட்டுங்கள். பட்டாபிஷேகம் இலகுவாக நடந்தேறும்.

ஆகையால் உண்மையானவர் யார்? என்பதை சீர்தூக்கிப் பாருங்கள். நிச்சயம் உங்களின் தீதில்லா இதயம் தர்மம் எது என்பதை இனங்கண்டு கொள்ளும்.

# ஆட்சிப் பீடத்தில் அமரக்கூடிய சக்தி சஜித்திடம் மட்டுமே உள்ளது -அஜித்

(கொழும்பு)

கட்சியில் பல்வேறு தரப்பினரும் சஜித் பிரேமதாஸவையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். சாதாரண பொதுமக்களும் அதனையே எதிர்பார்க்கின்றார்கள். மக்கள் ஆதரவைப் பெற்று ஆட்சி பீடத்தில் அமரக்கூடிய சக்தியை கொண்டிருக்கும் ஒரேநபர் சஜித் பிரேமதாஸவே என என்று டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள், தகவல் தொழில்நுட்ப (அமைச்சரவை அந்தஸ்து அற்ற) அமைச்சரான அஜித் பீ.பெரேரா தெரிவித்தார்.

இதனைவிடவும், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுவிலும் சரி, மத்திய செயற்குழுவிலும் சரி சபாநாயகர் கரு ஜெயசூரியவின் பெயர் முன்மொழியப்படவே இல்லை.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் குறித்து கலந்துரையாடப்படவில்லை என்பதை பொறுப்புடன் கூறுகின்றேன்.

சஜித் பிரேமதாஸ்வின் பெயர் மட்டுமே முன்னிலைப்படுத்தப்பட்டு பேசப்படுகின்றது.

ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ களமிறங்குவதற்கு தனிப்பட்ட முறையில் விருப்பம் கொண்டிருக்காத, எதிர்மறையான நிலைப்பாடுகளை வெளியிடும் சிலர்கட்சியினுள் உள்ளார்கள்.

அத்தகைய சிலராலே சஜித் பிரேமதாஸ மீது சேறு பூசும் நடவடிக்கைகள் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனால் தான் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவார், அனைவரின் ஆதரவையும் பெறுவார் என்பதை தெரிந்துகொண்டும் அவரைப் பெயரிடுவதில் தாமதங்கள் நிலவுகின்றன.

கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்பேச்சுக்கள் முன்னேற்றகரமாகவே இருக்கின்றன.

ஆனாலும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ பெயரிடப்படுவதோடு, சஜித் பிரேமதாஸவுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு இடையில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே கூட்டணிக்கான கைச்சாத்து இடம்பெற வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகவுள்ளது.

சஜித் பிரேமதாஸவின் இணக்கப்பாட்டின்மையுடனும், மத்திய செயற்குழுவின் அனுமதியின்றியும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கான யாப்பு அமைக்கப்பட்டமையின் காரணத்தால் தான் அவர் பொதுச்செயலாளர் பதவியைக் கோரியிருந்தார்.

'பொறுப்புக் கூறுவதிலிருந்து விலகிநிற்கும் தனியொரு நபருக்கு அதிகாரங்கள் வழங்குவது தவறானது என்ற ஜனநாயகச் சிந்தனையுடன் தான் அவ்வாறானதொரு நிபந்தனையை சஜித் விதித்திருந்தார்.

தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய கூட்டணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வினை பிற்போட்டுள்ளதோடு யாப்பினையும் மறுசீரமைக்கும் பணிகளை முன்னெடுத்துள்ளார்.

சஜித் பிரேமதாஸவும் புதிய கூட்டணியில் பங்கேற்கும் தரப்புக்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளார். ஆகவே அந்த நிபந்தனை தற்போது அவசியமில்லை.

ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாச நியமிக்கப்படுகின்றபோது, புதிய கூட்டணிக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அனைவராலும்ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய நபர் ஒருவருக்கே பொதுச்செயலாளர் பதவியை வழங்க வேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் வண். வடமேற்கு பிரப்பம்பதி ஸ்ரீ செல்வவிநாயகப் . பெருமான் தான் தோன்றி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இச் சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு இன்று மாலை 3 மணி முதல் 4 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. (03)

# மதத்தை விடவும் மனித உயிர் பெறுமதி கர்தினால் ரஞ்சித்

(கொழும்பு)

மதத்தை விடவும் மனித உயிர் பெறுமதியானது எனவும், மதத்துக்காக மனித உயிரைக் கொலை செய்ய முடியாது எனவும், அவ்வாறு கொலை செய்தால் அது மகா பெரிய பாவமாகும் எனவும் கர்தினால் மெல்கம் ரஞ்ஜித் ஆண்டகை தெரிவித்தார்.

கொடுகொடயில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

சமகால உலகிலுள்ள மனிதர்கள் மனித உயிரை மதிக்காமல் நடந்துகொள்வதாகவும், அவ்வாறு நடந்து கொள்பவர்களை கடவுளின் படைப்பு என்றே கூறமுடியாது எனவும் கர்தினால் குறிப்பிட்டுள்ளார். (03)

# யோகாசன வகுப்பு

ஓம் பதஞ்சலி யோகா கேந்திராவின் யோகாசனப் பயிற்சி வகுப்புகள் யாழ். கந்தர்மடம் சந்தி, பலாலி வீதியில் அமைந்துள்ள இந்து சமய பேரவை மண்டபத்தில் நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பானது வெள்ளி,சனி, மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6மணி தொடக்கம் 7மணி வரை இடம்பெறும். இதில் அனைத்து வயதினரும் கலந்து கொள்ள முடியும் எனவும் மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் அல்லது 0774940541 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

# சடலத்தை அடையாளம் காட்டுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சடலத்தை அடையாளம் காணுமாறு யாழ்ப்பாணம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து மீட்கப்பட்ட நபரின் சடலம் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரின் சடலத்தை அடையாளம் காணுமாறு பொதுமக்களை பொலிஸார் கோரியுள்ளனர்.

இவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கமான 021 222 2222, அல்லது 021 3211258 என்ற தொலை பேசி இலக்கங்களுக்கு அறியத் தருமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்தனர். (இ-101)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆன்மீகக் கல்வி



❖ ஒரு ஆற்றில் திடீரென வெள்ளம் பெருகி வருகிறது. பல மைல்கள் தொலைவு வரையில் மழையே இல்லை. எப்படித் தண்ணீர் வருகிறது? இதன் காரணமறிந்தால் எவ்வாறு ஒரு நாட்டில் திடீரெனப் போர் உண்டாகிறது என்பதை அறியலாம். எங்கோ பல மைல் தொலைவில் நல்ல மழை பெய்திருக்கிறது. இது ஒரு மேடான பூமி. மழைநீர் கடலை நோக்கி ஓடுகிறது. அந்த நீரைத் தான், வறண்ட ஆற்றில் பெரும் வெள்ளமாகக் காண்கிறோம். இதே போல உலக மக்கள் வாழ்வில் கணக்கிட முடியாத துன்பங்கள் நிலவுகின்றன.

❖ எல்லாத் துன்பங்களுக்கும் காரணம், மனிதன் மதிப்பை, மனிதன் அறியாமல் செய்யும் தவறுகள் தான். எப்படி? அறநெறி வழியே வாழ மக்களுக்கு முறையான "ஆன்மீகக் கல்வி"யும் இல்லை பயிற்சியும் இல்லை. பெரும்பாலான மக்கள் இதனால் பொருள், புகழ், அதிகாரம், புலன் இன்பம் நான்கிலே அளவு மீறிய ஆசையைப் பெருக்கிக் கொண்டு வாழ்கிறார்கள். உண்மையில் மனிதருக்குப் பொருளும், புலன் இன்பமும் வாழ்வில் இன்றியமையாதவை.

❖ ஆயினும், அவற்றைப் பெறத் தனது நேர்மையான முயற்சியும், உழைப்பும் வேண்டும். உழைப்பின்றியே பொருளும், இன்பமும் பெறவேண்டுமென்ற வேட்பே, அதிகாரத்திலும், புகழிலும் அடங்கியுள்ளது. இதனால் தான், உலகம் முழுவதும் மனிதகுலம் பொருள், புகழ், அதிகாரம், புலன் இன்பம் என்ற நான்கில் ஆசையைப் பெருக்கிக் கொண்டு என்றும், எதிலும் நிறைவு பெற முடியாமல், இன்னும் வேண்டும் என்ற முடிவில்லாத, அமைதியில்லாத மனநிலையில் சிக்கிக் கொண்டிருக்கிறது. இறையுணர்வாகிய "பிரம்மஞானம்" பெற்றால் தான், மேலே சொல்லப்பட்ட பேராசைகள் நான்கும் மறைந்து "மன்நிறைவு" உண்டாகும்.

# விக்டோரி அணியை வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது பற்றீசியன்



ஏபி பவுண்டேஷன் நடத்தும் ரி 20 கிரிக்கெட் தொடரில் பற்றீசியன் அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் பற்றீசியன் அணியை எதிர்த்து விக்டோரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பில் பெற்றிக் 51, யூடர் 50, முரளி 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் விக்டோரி அணி சார்பில் பிரணவன் 2, திரேசன் ஒரு விக்கெட்டுகளை கைப்பற்றினர். பதிலுக்கு 155 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய விக்டோரி அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 115 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அவ்வணி சார்பில் சிந்துஜன் 24, பிரசாந் 19, பிரணவன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் லிவிங்ஸ்டன், பெற்றிக், மைக்கேல் ஆகியோர் தலா இவ்விரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் 39 ஓட்டங்களால் பற்றீசியன் அணி வெற்றி பெற்றது. (க)

## சென்றலைட்ஸ் அணிக்கு இரண்டாவது வெற்றி




அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் யாழ்.மாவட்ட ரீதியான ரி-10 துடுப்பாட்ட தொடரின் மூன்றாவது போட்டியில் அரியாலை மத்திய விளையாட்டுக்கழகத்தை 28 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சென்றலைட்ஸ் அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 10 ஓவர்கள் நிறைவில் 114 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. 115 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்தி அணி 86 ஓட்டங்கள் மாத்திரம் பெற்றுக் கொண்டன.

இந்த வெற்றியின் மூலம் சென்றலைட்ஸ் அணி தனது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# காலிறுதியில் ஜொனியன்ஸ்




அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் யாழ்.மாவட்ட ரீதியான ரி-10 துடுப்பாட்ட தொடரின் ஆறாவது போட்டியில் திருநெல்வேலி விளையாட்டுக்கழகத்தை 20ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரின் இரண்டாவது வெற்றியுடன் காலிறுதிக்குள் நுழைந்தது ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம்.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 10 ஓவர்கள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. 95 என்ற வெற்றியை நோக்கித் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி அணி 10 ஓவர்கள்நிறைவில் 7 இலக்குகளை இழந்து 74 ஓட்டங்கள் மாத்திரமே பெற்றுக் கொண்டது. (க)

# காலிறுதியில் ஓல்ட்கோல்ஸ் அணி




அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் யாழ்.மாவட்ட ரீதியான ரி-10 துடுப்பாட்ட தொடரின் ஐந்தாவது போட்டியில் அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்தை 5இலக்குகளால்வெற்றி பெற்று தொடரின் முதலாவது வெற்றியுடன் காலிறுதிக்குள் நுழைந்தது ஓல்ட்கோல்ஸ் அணி. (க)

## அரியாலை ச.ச.நிலைய அணியை வீழ்த்தி சம்பியனாகியது அரியாலை அருணோதயா



அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 67வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட தமிழரின் பாரம்பரிய விளையாட்டான கெந்தியடித்தல் போட்டியில் அரியாலை அருணோதயா சனசமூக நிலையம் சம்பியனாகியது.

இறுதிப் போட்டியில் அரியாலை சனசமூக நிலைய அணியுடன் பலப்பரீட்சை நடத்திய அருணோதயா சனசமூக நிலைய அணி சம்பியனாகியது. (க)

## தலைவரானார்...

தனது அரசியலில் ஆரம்பகால முதலான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறி முதன்முறையாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக உத்தியோகபூர்வமாக அவர் பதவியேற்றார்.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நேற்று பிற்பகல் 3 மணிக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது தேசிய மாநாடு ஆரம்பமானது. இந்த மாநாட்டில், கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மகிந்த ராஜபக்ஷவை கட்சியின் தலைவராக அறிவித்தார். (3)

## சொல்வதைச்...

தமிழில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நான் தமிழ் தலைவர்களை போன்றவன் அல்ல. செய்வத்தைத்தான் சொல்வேன், சொல்வதைத்தான் செய்வேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாநாட்டில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். மேலும் கூறுகையில்,

ஐ.தே.கட்சி எங்களுக்கு எதிரான வாக்குகளை பெற்று கடந்த 2015ஆம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றியது. அதன் பின் அனைத்து விடயங்களிலும் நாடு பின்னடைவை சந்தித்துள்ளது.

இதனால் இப்போது மீண்டும் நாட்டை நாங்கள் பொறுப்பெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் மீண்டும் பொறுப்பெடுக்கப்போவது 2015 நாம் அவர்களிடம் கொடுத்த நாட்டை அல்ல.

2005ஆம் ஆண்டு நாங்கள் பதவிக்கு வந்தபோது நாடு எப்படி இருந்ததோ அப்படித்தான் தற்போதும் நாடு இருக்கின்றது. ஆம், எம்மால் முடியும். மீண்டும் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

2005ஆம் ஆண்டு பதவிக்கு வந்தபோது முப்பது ஆண்டு கால யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவர முடியும் என்று யாரும் நினைக்கவில்லை. புகையிரதங்களில் சுதந்திரமாக கொழும்பிற்கு வரமுடியும் என வடக்கு மக்கள் யாரும் நினைக்கவேயில்லை.

டக்ளஸ் தேவானந்தா மட்டும்தான் நம்பிக்கையுடன் இருந்தார். கொழும்பு உட்பட பல்வேறு பகுதிகளை அபிவிருத்தி செய்ய முடியும் என்று யாரும் நம்பவில்லை.

ஆனால் அத்தனையையும் எம்மால் செய்ய முடிந்தது. அதேபோன்று எதிர்காலத்திலும் எம்மால் நாட்டுக்கு தேவையான அனைத்தையும் செய்ய முடியும் என குறிப்பிட்டுள்ளார். (3)

## சிங்களவராக...

ஒரு தமிழ் இலங்கையன். சிங்கள இலங்கையனாக இருந்திருந்தால் இந்நேரம் இந் நாட்டின் ஜனாதிபதி ஆகியிருப்பேன். தன்னம்பிக்கைதான் என் முதல் பலம். சிறுபான்மை தமிழர்கள் (தமிழ் பேசும் முஸ்லிம்களும் கூட) என்னை இன்னமும்கூட முழுமையாக புரிந்து கொள்ளவில்லை என நினைக்கிறேன். அத்தகைய புரிதல் வருவதற்குள் நான் பொதுவாழ்வில் இருந்து விடைபெற்று விடுவேன் என்றும் நினைக்கிறேன்" என அவர் மேலும் கூறியுள்ளார். (3)

## வெள்ளை வான்...

வலுவான வேட்பாளரை நிறுத்தி ஐக்கிய தேசியக் கட்சி கோத்தபாய ராஜபக்ஷவை தோற்கடிக்கும் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த தேசத்தின் அடுத்த ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவோ அல்லது வேறு எந்த ராஜபக்சவோயில்லை. இலங்கையின் அடுத்த ஜனாதிபதி பல பத்திரிகையாளர்களினதும் அப்பாவிகளினதும் குருதிகளை தனது கைகளில் கொண்டுள்ள குற்றவாளியில்லை எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி இலங்கையில் பிறந்தவராகவும் இந்த நாட்டிலிருந்து தப்பியோடி இன்னொரு நாட்டிற்கு விசுவாசம் வெளியிடாதவராகவும் காணப்படுவார் எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி ஜனநாயகம் என்ற தளத்திலிருந்து நீதித்துறை பொதுச்சேவை மற்றும் ஏனைய சுயாதீன கட்டமைப்புகளை பாதுகாப்பதற்கு உறுதி பூண்டவராகவும் ஐக்கிய தேசிய கட்சியினாலும் அதன் கூட்டணிகளாலும் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டவராகவும் காணப்படுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சியில் பதவி வகித்த கடந்த நான்கு வருட காலப்பகுதியில் எந்த பாடத்தையும் கற்கவில்லை. அவர் தனது குடும்பத்திற்கு அதிக அதிகாரங்களை வழங்கினார் என்பதை உணரவில்லை. தான் நாட்டை அதிகளவிற்கு பயமுறுத்தினேன் என்பதை உணரவில்லை. தான் நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்திற்கு அச்சுறுத்தினேன் என கவலையடையவில்லை. எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பிரகீத் எக்னலிகொட காணாமல் போகச் செய்யப்பட்டமை குறித்தும் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை குறித்தும் கீத் நொயார் தாக்கப்பட்டமை குறித்தும் மகிந்த ராஜபக்ஷ கவலைப்படவில்லை எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (3)

## கோத்தாவே...

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது தேசிய மாநாடு ஆரம்பமானது.

இந்த மாநாட்டில், கட்சியின் தலைவராக மகிந்த ராஜபக்ஷ அதிகாரபூர்வமாகப் பொறுப்பேற்றார். இதையடுத்து தலைமை உரையை அவர் வழங்கினார்.

மாநாட்டில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ, சரியாக 4 மணிக்கு, கோத்தபாய ராஜபக்ஷவை வேட்பாளராக நிறுத்துவதாக அறிவித்தார்.

அப்போது, திடீரென மாநாட்டில் பங்கேற்றிருந்தவர்கள் ஒரே நேரத்தில் பெரும் கரகோசம் எழுப்பி, கோத்தபாய ராஜபக்ஷவின் படங்களை உயர்த்திப் பிடித்தனர்.

இதையடுத்து, கோத்தாவை வரவேற்கும் பாடல் ஒலிக்கவிடப்பட்டது. உடனடியாக கோத்தபாய ராஜபக்ஷ மேடையில் மகிந்தவுடன் காட்சி அளித்தார். (3)

## வேட்பாளராக...

துங்க தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நபரும் அழகான சொற்பிரயோகங்களை மேற்கொண்டாலும் அழகாகப் பேசினாலும் அவர்களது செயற்பாடுகள் தொடர்பிலேயே கவனம் செலுத்த வேண்டும்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு சகோதரர்களுடனும் ஏனையோர்களுடனும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவுதற்கு 9 வருடங்கள் முழுமையாக சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் 2015ஆம் ஆண்டு ஆட்சி செய்த அரசாங்கத்தை மாற்றி கூட்டமைப்பு அரசாங்கத்தை கொண்டு வருவதற்கு மக்கள் தீர்மானித்தமைக்கு காரணம் இருந்தது.

ஊழல்மிக்க அரசாங்கத்தை மாற்றியமைப்பதற்காகவே மக்கள் அந்தத் தீர்மானத்தை எடுத்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இதேவேளை சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக வெளியாகும் கருத்துக்கள் பொய்யானது எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டார்.(3)

## தமிழர்களின்...

தொடர்பில் நான் கௌரவத்துடனும் நேர்மையுடனும் ஏற்றுக் கொள்கின்றேன்.

அந்த வேட்புரிமையை நான் எவ்வாறு காண்கிறேன் என்றால், இந்த நாட்டில் எதிர்கால அரசியலில் புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்குவதற்குரிய மக்கள் சார்பான, முற்போக்கு சக்திகளினால் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட யுகத்தின் பணியாகவே ஆகும்.

இந்த தீர்மானத்தை எடுப்பதற்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நான் தலை வணங்குகிறேன்.

இந்த தாய் நாட்டில் பிறக்கும் எவரொருவரும் அச்சம், சந்தேகமின்றி வாழக் கூடியதான, பாதுகாப்பான சூழலை மீண்டும் கட்டியெழுப்புவேன் என்று நான் உறுதி கூறுகின்றேன். நான் ஒருபோதும் தீவிரவாத பயங்கரவாதத்திற்கு இடமளிக்க மாட்டேன்.

அதேபோன்று வடக்கு மக்களுக்கு தேவையான, சிறப்பான எதிர்பார்ப்புக்கள் பற்றி எமக்கு நல்ல புரிந்துணர்வு உள்ளது. அவர்களின் இப் பிரச்சினைகளை எமது அரசால் உறுதியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

இதுவரை பொறுப்பேற்ற எல்லா பொறுப்புகளையும் உயர்ந்த மட்டத்தில் நிறைவேற்றியவாறு இந்த முறையும் உங்கள் அனைவரும் முன்னிலையில் நான் கௌரவத்துடன் கூறுவது, இன்று நாட்டுக்கு தேவையாக உள்ள நீங்கள் அனைவரும் கேட்கும், அந்த தேசிய கடமையினை நிறைவேற்றுவதற்கு நான் தயாராக உள்ளேன் என்றார். (3)

## மக்களின் பிரச்...

தற்போது தேவையோ அதனை வழங்க முடியும் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கி யுள்ள பேட்டியிலேயே அவர் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ குறித்து எதிர்க்கட்சிகள் பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள போதிலும் அவர் மோசமானவரில்லை என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்களே கோத்தபாய ராஜபக்ஷவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என ஏற்கெனவே தீர்மானித்துவிட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியினர் சித்திரிப்பதுபோல கோத்தபாய ராஜபக்ஷ மோசமான மனிதரில்லை. அவர் செயற்திறன் மிக்கவர். அதிகம் பேசமாட்டார், அமைதியாக செயற்படுபவர் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது சட்டமொழுங்கில்லை. ஜனநாயகம் இல்லை. தேர்தல்களும் இல்லை எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாங்கள் இலங்கைக்கு பாதுகாப்பையும் அபிவிருத்தியையும் வழங்குவோம் என்பதும் இந்தியாவுடன் நல்லுறவுகளை உறுதி செய்வோம் என்பதும் புதுடில்லிக்கு தெரியும் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (3)

## உடை மற்றும்...

யிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

மேலும், பெயர் மாற்றம் செய்யப்பட்டதால் விசேட சக்தி ஏதும் கிடைக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.













ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று அறிவிக்கப்பட்டார். பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைவர் பொறுப்பைப் பொறுப்பேற்றுக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ வேட்பாளர் அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கருத்தை முன்வைத்துள்ளார்.(3)

## கோத்தாவிற்கு...

வித்துள்ளன

பொதுஜனமுன்னணியுடன் இணைந்து கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் சுதந்திரக்கட்சி கோத்தபாய ராஜபக்ஷவுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடும் என ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவுடன் ஒரு உடன்படிக்கையிலும் பொதுஜன முன்னணியுடன் மற்றுமொரு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப் போவதாக சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாகாண சபை தேர்தல்களை முன்கூட்டியே நடத்துவதற்காக நீதிமன்றத்தின் ஆலோசனையை பெறுவதற்கான முயற்சிகளையும் சிறிசேன ஆரம்பித்துள்ளார். (3)

## சுதந்திரக் கட்சி...

ல.சு.கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நேற்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதிக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

கட்சியொன்றைக் கட்டியெழுப்புவதற்கு ஒழுக்கம் முக்கியமானது. ஒரு கட்சியில் பாராளுமன்றத்தில் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டு இன்னுமொரு கட்சிக்கு செயற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு செயற்படுபவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (3)












## விற்பனைக்கு

17 வருட சொந்த பாவனையில் உள்ள 59 - 2050 Lite Ace Van விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 021 221 1252, 076 671 3027**

(9844)


## விபத்தில் ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் வேம்படி சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வேம்படி சந்தியில் நேற்றிரவு இலங்கை அரச பேருந்தும் முச்சக்கர வண்டி ஒன்றும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட் டுள்ளது. விபத்தின் போது படுகாயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதி உடனடியாக வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அவ்விடத்திலிருந்தவர்களால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. (3)


## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

(C-7253)

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.





CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413


# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை மகேசன்



மண்ணில் 02 • 08 • 1930

விண்ணில் 10 • 08 • 2019

மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி, திருகோணமலை, உரும்பிராய், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை மகேசன் அவர்கள் 10.08.2019 சனிக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை - சந்தனம் தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற ஆறுமுகம் வைத்திலிங்கம் - பவளம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயதேவியின் (கனடா) அன்புக் கணவரும், ஞானாம்பிகை, சர்வேஸ்வரி, சொர்ணகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜானகி (M.Sc-Veterinary Surgeon - USA), பகீரதன் (B.Sc முன்னாள் ஆசிரியர் - Colombo Good Shepherd Convent, Director - Beefort Intl. School ACA, Colombo), குமுதினி (முன்னாள் ஆசிரியை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் - கனடா), மாதவன் (B.Sc.Eng Director, Colombo Petro Engineering Ltd.Colombo), மைதிலி (முன்னாள் Stenogra pher. Jaffna Kacheri - கனடா) ஆகியோரின் அன்புமிகு தந்தையும், Dr.சத்தியசீலன் (Ph.D Veterinary Surgeon - USA), ஸ்ரீரங்கநாதன் (Canada Global Care - கனடா), ஜெயநேசன் (Canada FedEx & KEG - கனடா), ரவிகலா, விஜிதா B.A (Hons) ஆகியோரின் அன்பு மாமனாரும், Dr.சிந்துஜா Ph.D (University of Toronto), வருண், திவ்யா (Staff, Topline Credit Union, Minnesota - USA), ராகுல், கிருஷா, ஐஷ்வரன் B.Eng, அதிஷ்வரன் B.Eng, ரோஹித், சஞ்சய், ராகவ், ரிஷானா, Dr.GeoffBouvier Ph.D (university of Toronto), M.Ramanan (Manager, TCF Bank, Minnesota - USA) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.08.2019) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு இல.18/5 மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-7264)

இல.18/5, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம். தகவல் - குடும்பத்தினர்


## வீடு வாடகைக்கு

உரும்பிராய் அம்மன் வீதியில் (3 கோயிலடி) நல்ல வசதிகளுடன் கூடிய வாகன தரிப்பிட வசதியுடன் மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு : 077 822 1744**

(9864)

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg

(C-7197)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

0768226240

V2 TRAVELS

## வீடு வாடகைக்கு

யாழ் சுண்டிக்குளி பிரதேசத்தில் பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் வீதியில் 4 படுக்கை அறைகள், 4 அற்றாச் கழிப்பறைகள், 3 குளியலறைகள், 1 பெரிய சமையலறை, 1 பெரிய வரவேற்பறை, 1 சாப்பாட்டறை, 13 அடி அகலமான கேற், வாகனம் நிறுத்தும் இடம், 4 பக்கமும் மதில், கூரைக்குக்கீழே 2200 சதுர அடி கொண்ட 2 பரப்புக் காணியில் வீட்டு இலக்கம் 8 இல் அமைந்த மிக மிக விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. வாடகை மற்றும் அட்வான்ஸ் என்பன நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**தொடர்புகளுக்கு : 077 111 9535**

(C-7252)


## மேலைப் புலோலி ஆலடிப் பிள்ளையார் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு

## கம்பவாரிதியின் சிறப்புச் சொற்பொழிவுகள்



காலம் : 13.08.2019 முதல் 15.08.2019 வரை
இடம் : மேலைப்புலோலி அருள்மிகு ஆலடிப் பிள்ளையார் ஆலய முன்றல்
நேரம் : பிற்பகல் 6.30 - 8.00 மணிவரை

13.08.2019 செவ்வாய் 8ஆம் திருவிழா –
விடயம் – "பிறந்திளைத்தேன்"
14.08.2019 புதன் 9ஆம் திருவிழா –
விடயம் – "வேண்டத்தக்கது அறிவோய் நீ"
15.08.2019 வியாழக்கிழமை 10ஆம் திருவிழா –
விடயம் – "காயத்துள் அமுது ஊற ஊற"

அடியவர்கள் அனைவரும் திரண்டு வந்து ஆலடியான் அருள்பெற்று பக்தித் தமிழின் சுவை பருக அழைக்கிறார்கள்

விளம்பர அனுசரணை :- நியூ மாணிக்கப்பிள்ளையார் றேடர்ஸ் இல.42, பிரதானவீதி, பருத்தித்துறை.

விழாக்குழுவினரும் ஆலய பரிபாலன சபையினரும் மேலைப்புலோலி ஆலடிப்பிள்ளையார் ஆலயம்


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

(C-7154)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.